For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

விலை : ரூ 60

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

ஆகஸ்ட் 2022 இதழ் 27



## உபத்திரவங்களின் வழிபாடங்கள்

# ஆசிரியர் சுவடு

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் திருநெல்வேலி வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் நமது 75-வது சுதந்திர தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சரியான பாதை எதுவென தெரியாத நிலையில் நாம் இருக்கும் போது, வரலாற்றுச் சம்பவங்கள் நமக்கான பாதைகளை சாட்சிகளாக நமக்கு காட்டுகின்றன. இத்தகைய வரலாறுகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவன் நமக்களித்த வரலாற்று அறிஞர்கள் மூலமாய் அதிக தியாகத்தோடும் அர்பணிப்போடும் அடுத்த தலைமுறைக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும், பொக்கிஷமாகவும் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வரிய செல்வத்தை நமக்கு மட்டுமல்லாமல், நம் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வது நம்மேல் விழுந்த தலையாய கடமையாகும். அந்த அளப்பரிய பணியை செய்ய அர்பணிக்கப்பட்ட இயக்கங்களுள் ஒன்று கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்.

இம் மாத இதழானது **“உபத்திரவத்தைக் கையாளுவதில் பின்பற்றத் தகுந்த வரலாற்று மாதிரிகள்”** என்ற தலைப்பின் அடிப்படையில் வரலாற்று உண்மைகளை சம்பவங்களோடு நம் கண்முன்னே ஆசிரியர்கள் கொண்டு வந்துள்ளார்கள். குறிப்பாக ஜப்பானியர்களால் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டு மரண தண்டனையில் இருந்து தப்பித்த ஜாண் ரிச்சட்ஸனின் மறைக்கப்பட்ட வரலாறு, உபத்திரவம், பாடுகள் மத்தியில் மிஷனெரிகளின் வாழ்வியியல் வழிமுறைகள், புகழ்பெற்ற நாவல்களுடன், அப்படியே நமது வரலாற்றுச் சங்க பணிகளையும் வட நெல்லை அப்போஸ்தலர் புத்தக வெளியிடு மற்றும் வரலாற்றுச் சுற்றுப்பயண தகவல்களுடன் இவ்விதழ் அமைந்துள்ளது.

இவ்விதழை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் பின்பற்றிய வழிமுறைகளை மற்றவர்களோடு கூட பகிர்ந்து கொள்ளவும், இதழையும் அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். உங்கள் பகுதியிலுள்ள வரலாற்றுச் செய்திகளை எழுத விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும் தலைப்பின்கீழ் எழுதி அனுப்ப அன்பாடுகூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வரும் செப்டம்பர் மாத தலைப்பாக **“அன்றைய சுவிசேஷப்பணியிலிருந்து இன்றைக்கான பாடங்கள்.”** என்ற தலைப்பில் வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளை எழுதி அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சமயத்தைப் பரப்புதலிலும், மனித நேயத்திலிருந்தும் சுவிஷேப் பணிகளை எப்படி மேற்கொண்டார்கள் என்ற தகவல்களை வரலாற்றுப் பக்கங்களில் இருந்து அனுப்பித்தாருங்கள்.


கிறிஸ்துவின் பணியில்

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்
75388 12218, 91767 80001
christianhistorical@gmail.com

சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்
திருநெல்வேலி
வெளியீடு





கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்





**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001


மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்” மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
‘திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

**சந்தாவை வங்கி கணக்கில் செலுத்த**

Bank :- Federal Bank
Name :- Tinnevelly Christian Historical Society
Account number :- 1748 020000 3684
IFSC Code :- FDRL0001748

christianhistoricalsociety.in/
tchsportal.co.in



# புடமிடப்பட்ட பொன் பேராயர். ஜாண் ரிச்சர்ட்ஸன்

● முனைவர் ஜோ. இரவிக்குமார் ஸ்றீஃபன்
Former Episcopal Church Bishop in the Diocese of South Carolina,US
Peace.Evangelist@gmail.com

**அறிமுகம்:**

ஆங்கில நற்செய்தி பணியாளர்களைப் பற்றி, அவர்கள் சார்ந்த நற்செய்தி அமைப்புகளோ, அல்லது இந்திய ஆயர்களோ அல்லது இறையியல் கல்லூரி பேராசிரியர்களோ அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை எழுதி வருகின்ற தலைமுறையினர் அந்த நற்செய்தி பணியார்களைப் பற்றி அறிந்து கொள்ளும்படி ஆவணப்படுத்தி இருக்கின்றனர். ஜெர்மானிய லூத்ரன் ஆயர் இரேனியஸ் பற்றி அவரது நாட்குறிப்பின் அடிப்படையில், இரேனியஸின் மகன் தன் தந்தையைப் பற்றி நினைவுக் குறிப்பை நூல் வடிவில் கொண்டு வந்திராவிடில் இரேனியஸ்க்கு கல்லறைத் தோட்டத்தில் இடம் மறுக்கப்பட்டது போல், பிரிக்கப்படாத திருநெல்வேலியின் அப்போஸ்தலர் இரேனியஸ் அவர்களின் நற்செய்திப் பணியும் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கும். இப்படி அறியப்படாது போன நற்செய்திப் பணியாளர்கள் அதிகம். இக் கட்டுரையும் அப்படிப்பட்டதுதான் படிக்க நேரம் ஒதுக்கிய நீங்கள் ஏமாற்றமடைய மாட்டீர்கள் என்பது நிச்சயம்.

**அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அப்போஸ்தலர்:**

சென்னையிலுள்ள S.P.G. நற்செய்தி சங்கத்தார் வேதப்பன் தம்புசாமி சாலோமோன் என்ற உபதேசியார் ஒருவரை தேர்ந்தெடுத்து அரசாங்க பாதிரியாரான ஆயர் C.H. சார்ட் (Chard) (பர்மிய S.P.G. நற்செய்தி சங்கத்தில் பணியாற்றியவர்) அவர்களின் மேற்பார்வையில் பணியாற்றும் படித் தேர்வு செய்து அந்தமானுக்கு அனுப்பினார்கள். உபதேசியார் வேதப்பன் சாலோமோன் 1895-ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் நாள் அந்தமான் வந்தடைந்தார்கள். பையன்களுக்கான விடுதியை பராமரிக்கும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விடுதியில் தங்கி இருந்த அனைத்துப் பையன்களும் இறந்தோ அல்லது ஓடியோ விட்டனர். நிக்கோபார் பையன்களில் சிலர், குடும்ப ஞாபகம் காரணமாக படகில் தப்பிச் செல்ல முயன்ற போது கடலில் காணாமல் போய்விட்டனர். ஆகவே இப்படிப்பட்ட நிகழ்வுகள் இனி நடக்காதிருக்க வேதப்பன் சாலோமோன் தானே நிக்கோபார் சென்று பள்ளிக்கூடம் திறந்து ஊழியம் செய்ய தீர்மானித்தார்.

ஆகவே 1896-ல் கார் நிக்கோபாரில் மஸ் (Mus) என்ற இடத்தில் பள்ளியொன்றும், ஊழியர் தங்குவதற்கு ஓர் இல்லமும் கட்டப்பட்டது. மேனாள் பள்ளி மாணவர்களை அழைத்து ஞாயிற்றுக் கிழமைகளில் இறை வேண்டுதல் நடத்தினார். பின்னர் 12 பையன்களைக் கொண்டு ஒரு பள்ளியை ஆரம்பித்தார். இவ் பன்னிருவரில் ஒரு பையனின் பெயர் ஹா-செவ்-கா (Ha-Chev-Ka). நிக்கோபார் பெயர்களைக் கொண்டு அழைப்பதில் சிரமாக இருக்கவே, அனைத்து மாணவர்களுக்கும் ஜாண் என்று பெயர் கொடுத்தார். ஹா-செவ்-கா, 1884-ஆம் ஆண்டு ஜுன் 6-ஆம் நாள் பிறந்தவர். இவருக்கு ஆயர் கோரி (Cory) அவர்களால், 1900-ஆம் ஆண்டு ஜாண் ரிச்சட்ஸன் என்று பெயரில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது.

**அவர்களை இளமையாகப் பிடிக்கவும்:**

சிறுவயதிலேயேயிருந்தே தலைமைப் பண்புகளைப் பெற்றவராக விளங்கினார். இரங்குன் பேராயரான நைட் (Knight) அவர்கள் நிக்கோபாருக்கு வந்த பொழுது, நிக்கோபாரிகளை படிக்க வைத்து அவர்களை நிக்கோபாரிகளிடம் பணியமர்த்த வேண்டியதன் கட்டாயத்தை உணர்ந்து, ஆண்பிள்ளைகளில் பலரையும் பெண் பிள்ளைகளில் சிலரையும் தேர்ந்தெடுத்தார். இவ்வாறாகத்தான் இரங்குனில் ஆயர் R.S. ஃபைஃப் (Fyffe) தலைமையில் இயங்கி வந்த S.P.G. நற்செய்தி சங்கத்தின்

மூலம், வின்செஸ்டர் (Winchester) மறை மாவட்டத்தின் நற்செய்தி சங்கத்தாரின் உதவியுடன், திரு. எர்னஸ்ட் ஹட்ஸ் (Ernest Hart) தலைமையில் மண்டலேயில் (Mandalay) இயங்கி வந்த S.P.G. பள்ளியில் கற்க, 1906-ல் ஜாண் ரிச்சட்ஸன் பர்மா வந்தடைந்தார். அங்கு படித்த ஏழு ஆண்டுகள் அவர் வாழ்வின் முக்கியமான பகுதியாகும். ஆங்கில போதனை மட்டுமின்றி, இயேசுவின் நற்செய்தி அடிப்படையிலான இறை நம்பிக்கையில் அவர் வளரவும் பேருதவியாக இருந்தது. படிப்பதில் மிகுதியாக ஆர்வம் காட்டி ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றார். ஆசிரியர்களும் தலைமைப் பண்புகளை அவர் வளர்த்துக் கொள்ள பேருதவியாக இருந்தனர். மல்யுத்தத்திலும், கால்பந்து விளையாடுவதிலும், வீரனாக இருந்த இவர், பள்ளிக்கு ஒரு வாரத்திற்கு தேவையான பணத்தை வங்கியில் இருந்து எடுத்துவரும் பொறுப்பையும் வகித்தார். பின்னர் S.P.G. சங்கத்தின் செயலராக இருந்த பேராயர் ஹென்றி ஹட்சின்சன் மாண்ட்கோமெரி, KCMG (Henry Hutchinson Montgomery), அவர்களிடம் திடப்படுத்துதல் பெற்றார்.

உபதேசியார் வேதப்பன் சாலோமோன் அவர்கள், 1909-ஆம் ஆண்டு நவம்பர் 22-ஆம் நாள் சிகிச்சைக்காக சென்னைக்கு வரும் வழியில், இரங்குனில் இறந்து போனார். 1912-ஆம் ஆண்டு நிக்கோபார் திரும்பிய ஜான் ரிச்சட்ஸன்னிடம் நற்செய்தி பணியை கொடுத்துவிட்டு அவரின் கீழ் பணிசெய்ய திருமதி அன்பு பெட்ஸி சாலோமோன் முன் வந்த பொழுது, தன்னை ஆளாக்கிய திரு.அன்னையின் கீழ் பணிபுரிய முன்வந்தது, திரு விவிலியம் (1 சாமுவேல் 15:22) கூறும் தலைமைப் பண்பை வெளிக்காட்டினார். கிராமங்கள்தோறும் பயணித்து பள்ளிக்கூடத்திற்கு ஆட்களைச் சேர்த்தார்.

திருமதி சாலோமோன் அவர்கள் படித்த ஜான் ரிச்சட்ஸன்னுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையாக சென்னை போன்ற பட்டினங்களில் பெண்கள் கிடைப்பார்கள் என்று கூறியபோது அப்படிப்பட்ட திருமணம் தன்னை நிக்கோபார் மக்களிடம் இருந்து தனிமைப் படுத்திவிடும் என்று கூறி மறுத்து, உபதேசியார் ஜான் ரிச்சட்ஸன் 1913 ஆம் ஆண்டு நிக்கோபார் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

**உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸன்னின் நற்செய்திப் பணியின் ஆரம்ப நிலை:**

1921-ஆம் ஆண்டு திருமதி சாலோமோன் அவர்களும் இறந்து போகவே, நற்செய்திப் பணியின் முழு பொறுப்பும் உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸன்னிடம் வந்து சேர்ந்தது. அவருக்கு ஆலோசனை வழங்கி உதவி செய்யும் பொருட்டு S.P.G. நற்செய்தி சங்கத்தார் ஆயர் ஜீயார்ஜ் ஒயிட்ஹெட் (George Whitehead) அவர்களை அனுப்பி இருந்தனர். அவரும் ஜாண் ரிச்சட்ஸன்னும் சேர்ந்து, உபதேசியார் வேதப்பன் சாலோமோன் நற்செய்தி நூல் நான்கையும் மொழி மாற்றம் செய்து வைத்திருந்த பிரதிகளைப் படித்து விட்டு, மீண்டும் அதன் அடிப்படையில் புதிய மொழிமாற்றும் பணியில் ஈடுபட்டனர். 1923 ஆம் ஆண்டு இருவரும் சேர்ந்து, புதிய ஏற்பாட்டின் நூல்கள் அனைத்தினையும், பழைய ஏற்பாட்டின் நூல்களில், திருபாடல்களையும் (Psalms) நிக்கோபார் மொழியில் மொழிமாற்றம் செய்து இரோமன் எழுத்துக்களை பயன்படுத்தி அச்சிட்டு வினியோகித்தனர்.

ஆயர் ஜீயார்ஜ் ஒயிட்ஹெட் சென்ற பின்னர் தனியாக செயல்பட வேண்டியதாக இருந்தது. போட் ப்ளயரிலிருந்த ப்ரீட்டிஷ் அரசும் கல்விப் பணிக்கும், மருத்துவ பணிக்கும் நல்ல உதவியைச் செய்தது. மரத்திலான மருத்துவமனையும், பள்ளிக்கூடமும் கட்டப்பட்டது. மருத்துவ சேவைக்காக, திருநெல்வேலியில் இருந்து Dr சேத் ஆசீர்வாதம் அவர்களும், அவருக்குப் பின்னர் மானாமதுரையில் இருந்து Dr இராயப்பன் அவர்களும் 1935 வரை பணியாற்றினர். 1933-ல் நிக்கோபாரின் மருத்துவ நற்செய்தி பணியின் பொறுப்பு இரங்குனில் தமிழ் மக்களிடத்தே பணிசெய்து வந்த ஆயர் விக்டர் N. கெம்ப் (Victor N. Kemp) டம் வழங்கப்பட்டது. Dr இராயப்பன், மானாமதுரைக்கு குடும்ப சூழ்நிலை காரணமாக திரும்ப வேண்டியதாகிவிட்டதால், ஆயர் விக்டர் N. கெம் சென்னையைச் சேர்ந்த ஸ்றீஃபன் ஜோன்ஸ் என்ற மலையாளி மருத்துவரை அடையாளம் கண்டு பணி அமர்த்தினார். Dr.ஸ்றீஃபன் ஜோன்ஸ் அவர்கள் செவ்வையான மருத்துவப் பணியினை ஆற்றி நிக்கோபார் மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். மருத்துவமனையிலும் பல நல்ல மாறுதல்களைக் கொண்டு வந்தார்.

1930 களின் துவக்கத்தில், ஆயர் விக்டர் N. கெம், போட் ப்ளயரில் இருந்து செயல்படும் ஆயரால் தொலைவில் இருக்கும் நிக்கோபார் மக்களுக்கு நல்ல இறைச்சேவையை வழங்க முடியாது என்பதை உணர்ந்து, உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸனை ஆயராக அருட்பொழிவு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்திருந்தார். அவ்வறிவுரையின் அடிப்படையில், 1923ல் திருநெல்வேலி மறைமாவட்டத்தின் பேராயராக அருள் புனிதமாக அர்ப்பணம் செய்யப்பட்டு, பின்னர் 1928ல் இரங்குன் மறைமாவட்டத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்டு சென்ற பேராயர் நார்மன் ஹென்றி டப்ஸ் (Norman Henry Tubbs) 1934ஆம் ஆண்டு இரங்குனுக்கு வரும்படி உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸனை அழைத்திருந்தார்; தான் எதற்காகச் செல்கிறோம் என்ற நோக்கத்தையும் அறியாதிருந்தார். ஓர் ஞாயிற்றுக் கிழமையன்று காலை 5.00 மணிக்கு கப்பல் இரங்குனை அடைந்தது. பேராயரே துறைமுகம் சென்று தனக்கு இருந்த அதிகாரத்தின் நிமித்தம் சுங்க இலாகா அலுவலர் சோதனையிட இல்லாத நிலையில், உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸனைக் கப்பலில் இருந்து இறக்கி தன்னோடு அழைத்துச் சென்றார். ஏனெனில் சிலமணி நேரத்தில் உபதேசியார் ஜாண் ரிச்சட்ஸனை டீக்கனுக்கான அருட்பொழிவு இரங்குன் தூய திருத்துவ பேராலயத்தில் நடக்க இருக்கிறது.

தன்னிடம் அணிவதற்கு அங்கி இல்லையே என்று தன் பள்ளி நண்பனும், பள்ளியின் ஆயருமான, ஆயர் W. R கர்ராட் (W R Garrad) அவர்களிடம் கூறிய போது அவர், பேராலய பாடகரிடம் இரவல் அங்கியை வாங்கும்படி ஆலோசனை வழங்கினார். இவ்வாறாக இரவல் அங்கியில் டீக்கனாக அருட்பொழிவு பெற்றார். அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று, ஆயராக அருட்பொழிவு பெற்றார். இவ்வாறு உடனடியாக ஆயராக அருட்பொழிவு கொடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டதென்றால், S.S. மகாராஜா கப்பல் அந்தமானுக்குச் செல்ல இருந்தது. மீண்டும் இப் பயணிகள் கப்பல் இரங்குனுக்கு மீண்டும் வருவதுவும் திட்டமில்லாதிருந்தது. சிலநாட்களில் ஆயர் விக்டர் N. கெம் உடனும், மேலும் இரு ஆயர்களோடு நிக்கோபாருக்கு பயணமானார்.

முதல் நிக்கோபார் ஆயராக கார் நிக்கோபார் திரும்பிய பிறகு மக்களிடையே நற்செய்திப் பணி செய்வதில் ஆர்வமாகப் பணியாற்றினார். உழைப்புக்கேற்ற பலன் இல்லாததால் பலமுறை

சோர்வுற்றார். வெறுங்கையனாகவே தன் வாழ்வு முடிந்து விடுமோ என்று அச்சமும் கொண்டார்.

**சூழ்ந்திருந்த இருள்:**

முதல் உலகப்போரில் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் எந்தத் தாக்குதலும் நிகழ்த்தப்படவில்லை. செப்டம்பர் 1939 ல் இரண்டாம் உலகப் போரும் அவ்வாறுதான் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ஆசியாவில் நிலவியது. ஜப்பான் ஹாங்காங்கையும், சிங்கப்பூரையும் மலேயாவையும் தாக்கியதால், டிசம்பர் 1941-ஆம் ஆண்டு பிரிட்டன் ஜப்பான் பேரரசர்கெதிராக போர் தொடுக்க வேண்டியதாயிற்று. 1941 ஆம் ஆண்டில் ஜப்பான் இரங்குனில் நடத்திய முதல் விமானத் தாக்குதலிலேயே படிக்கச் சென்றிருந்த ஆயர் ஜாண் ரிச்சட்ஸனின் மகன் பலியாகி விட்டார்.

1942 மார்ச் 23 ஆம் நாள் இரவில் ஜப்பானின் ஏகாதிபத்திய கடற்படை (Japanese Imperial Navy) இராஸ் (Ross) தீவையும் சதம் (Chatham) தீவையும் அடைந்து தாக்குதல் நடத்தியது. எவ்வித எதிர்தாக்குதலும் இல்லாமல் ஜப்பான் அந்தமானைக் கைப்பற்றியது. போட் ப்ளயரில் இருந்த அரசுரிமை வாய்ந்த இந்திய இராணுவத்தில் (Royal Indian Army - RIA) இருந்த ஆங்கிலேயர் அனைவரும் போர்கைதிகளாக சிங்கப்பூர் சிறைசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பொது ஆட்சி (Civil Administration) பணியிலிருந்த முதன்மை ஆணையாளர் போன்றோர், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்கள். RIA-வில் இருந்த இந்தியர்கள் உயர் படிமையில் (ranRank) சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவத்தோடு (Indian National Army - INAINA) சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அந்தமான் தீவு INA-யைச் சேர்ந்த Col. பச்சோவின் (Bucho) கட்டுபாட்டில் கொண்டு வரப்பட்டது. அவர் அந்தமான் சிறைக்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தார்; இப்படி விடுதலையானோரில் புஸ்கர் பஃகி (Pushkar Bagchi) போன்றோரும் அடங்குவர். புஸ்கர் பஃகி, ஜப்பான் கடற்படையின் உளவுத்துறைக்கு பொறுப்பாளராக நியமித்தனர்.

நான்காம் நாள், அந்தமானைச் சார்ந்த ஜுல்ஃபிக்கர் அலி (Zulfiqar Ali) என்ற பெயர் கொண்ட இந்தியர் ஜப்பானியர்களுக்கு சவாலாக இருக்கக் கூடும் என்பதன் அடிப்படையில், ப்ரொவ்னிங் கூடிப் பழகும் சங்கத்தின் (Browning Club) திறந்த நிலத்தில் பொதுமக்கள் மத்தியில் அவரது கைகள் ஒடியும் வரை திருக்கி, பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது அந்தமான் மக்களிடம் பீதியை ஏற்படுத்தும்படி நிகழ்த்தப்பட்டது.

இந்து பூசாரிகளையும், ஆங்கிலேய பெண்களையும், சிறுவர்களையும் ஜப்பானியர் அந்தமானைக் கைப்பற்றுவார்கள் என்று தெரிந்து கொண்டவுடன், தனிக்கப்பலில், அவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களுடன், Maj. A.G. பேர்ட் (Bird) போன்ற பொது ஆட்சி பணியிலிருந்த அலுவலர்களும் சென்றிருக்கலாம். ஆனால் பொதுப்பணி சேவையை தொடர்ந்து அந்தமான் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு அந்தமானில் தங்கி இருந்தனர். கல்கத்தாவில் கொலைக் குற்றம் செய்ததற்காக, தண்டனை தீர்விடமான அந்தமானுக்கு புஸ்கர் பஃகி அனுப்பப்பட்டிருந்தார். தண்டனை தீர்விடமான அந்தமானில் குற்றவாளிகள் சுதந்திரமாக சாதாரண வாழ்கையை நடத்தலாம். அந்தமானிலும், கையூட்டு பெற்ற குற்றத்திற்காக ஆறுமாத சிறை தண்டனையை Maj. A. G பேர்ட் வழங்கி இருந்தார். இக் காழ்புணர்ச்சி காரணமாக, ஜப்பான் கடற்படையின் உளவுத்துறைக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த, புஸ்கர் பஃகி, Maj. A.G ஜப்பானுக்கெதிராக உளவு செய்கிறார் என்ற குற்றச்சாட்டை பொய்யான ஆதாரத்தோடு கூறவே, அவர் கைது செய்யப்பட்டு, 1942, மே 5-ஆம் நாள் கைகளில் விலங்கிடப்பட்டு, அபர்தின் வீதி (Aberdeen Bazaar) வழியாக இழுத்து வரப்பட்டு, ப்ரொவ்னிங் கூடிப் பழகும் சங்கத்தின் திறந்த நிலத்திற்கு கொண்டு வந்தார்கள். பொதுமக்களை கட்டாயம் வரவேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார்கள். ஜூ-ஜிட்சு (Ju-Jitsu - கராத்தே போன்ற) அடிமுறையில் அடிக்கப்பட்டார். அவர் வேதனைக்குட்படுத்தப்படும் பொழுது, பொதுமக்களை கைதட்டும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அவரின் கைகளும் கால்களும், கழுத்தும் திருக்கப்பட்டு உடைக்கப்பட்டன. அமைதியாக வேதனையை அனுபவித்தவர் கடைசியாக: 'என் கடவுளே' என்று கூறினார். தாகமாக இருக்கிறேன் என்று கூறய போது, தண்ணீர் வரவழைக்கப்பட்டு அது, இகமி (Egami) என்ற பெயர் கொண்ட ஜப்பானிய அதிகாரியின் வாளைக் கழுவ பயன்படுத்தப்பட்டது. பின்னர் நீண்ட பள்ளத்தில் அவரைத் தள்ளி, இகமி தன் வாளால் அவரது தலையைத் துண்டித்தான்.

1942-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் நாள் ஜப்பானிய கடற்படை அதிகாரிகள், கார் நிக்கோபாரின் தீவில் ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் வசித்த மஸ் கிராமத்திற்கு வந்து உதவி ஆணையாளர் ஸ்காட் (Scott) அவர்களைப் பற்றி விசாரித்தார்கள். ஸ்காட் ஏற்கனவே பாதுகாப்பான இடத்திற்கு போய்விட்டார். கார் நிக்கோபாரின் கடற்கரையில் தங்கள் கொடியை நட்டி, கார் நிக்கோபார் தீவு ஜப்பானியர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை உறுதி செய்தார்கள். பின்னர் ஆயர் ஜான் ரிச்சட்ஸனை, தீவின் தலைமை தலையாரியாக (Chief Headman) நியமித்தார்கள். அவருக்கு வேலைக்கு ஆள் அனுப்பும் பணி கொடுக்கப்பட்டது.

1942-ஆம் ஆண்டின் இயேசு பிறந்த கொண்டாட்டத்தின் முந்தைய நாளின் மாலையில், 500 நிக்கோபாரிகளை அந்தமானில் வானூர்தி ஓடுபாதை கட்டுவதற்காக கூலிகளாக ஜப்பானியர்கள் கொண்டு சென்றார்கள். மேலும், 1943 மார்ச்சில் மீண்டும் 500 பேர்களை நிக்கோபாரிலிருந்து கொண்டு சென்றார்கள்.

Dr.திவான் சிங் (Diwan Singh) தலைமையில் அமைதி குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து சென்று பணியாற்றிய படித்தவர்களும், மருத்துவர்களும், சார்வார்களின் ஆலோசனையில் இராஸ் பிகாரி போஸ் ஆரம்பித்திருந்த இந்திய சுதந்திர கூட்டமைப்பில் (Indian Independence League) சேரும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். சேராதவர்கள் ஆங்கிலேயரின் கைகூலிகளாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அவரில் ஒருவர்தான் சென்னையிலிருந்து மருத்துவ நற்செய்திப் பணியாற்றிய மலையாள மருத்துவர் Dr.ஸ்றீஃபன் ஜோன்ஸ்.

ஜப்பானியர்கள் இந்தியாவின் மீது தாக்குதல் தொடுக்க நல்ல இடமாக நிக்கோபாரின் மலாக்கா (Malacca) கிராமத்தை மாற்றியமைக்க தேர்ந்தெடுத்தார்கள். 1943 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 4ஆம் நாள் ஜப்பான் கடற்படை மலக்காவுக்கு வந்தது. ஜப்பான் கடற்படைத்தலைவன் உடாமைட்ஷாரு (Ueda Mytsharu) தாங்களோடு நிக்கோபாரியர்கள் ஒத்துழைத்தால் செல்வந்தர்களாகி விடுவார்கள் என்று பேசினார். அவரது பேச்சில் அவர்கள்

கவரப்படவில்லையாயினும், 1000 கூலிகளை ஜப்பானியர்கள் திரட்டிக் கொண்டார்கள். நிக்கோபாரிய ஆண்கள் துறைமுகத்தில் அணைக்கரை (Jetty) கட்டும் பணியிலும், நிக்கோபாரிய பெண்கள், மற்ற வீட்டுப் பணிகளிலும் அமர்த்தப்பட்டனர். பெரிய பீரங்கிகளும், இராணுவ கவசஊர்திகளும், பெரிய லாரிகளும் (land-craft) வந்திறங்கின. பல வாரங்கள் அவைகளை இறக்கும் பணியில் ஆண்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

**மரணத்தின் கோரப்பிடி:**

ஜப்பானிய மொழி அனைவருக்கும் கற்றுத் தரப்பட்டது. ஞாயிற்றுக் கிழமைதோறும் ஜப்பானிய அரசர் பெண் தெய்வங்களின் வழித்தோன்றல்கள் என்றும், ஜப்பானியர்கள், உலக சாம்ராஜ்ஜியங்களை வீழ்த்த இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமென்றும் போதனைகள் வழங்கப்பட்டது. வீடுவீடாக சென்று 12 வயதிலிருந்து, 50 வயது வரையிலானவர்களில் வாட்ட சாட்டமாக இருப்பவர்கள் இராணுவ தளங்களுக்கு அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். நிக்கோபாரிய பழங்குடியினர் எல்லா நாட்களும் வேலைக்கு வர வேண்டும்; வியாதிப்பட்டிருந்தாலும் குடிசைக்குள் புகுந்து கூட்டிச் செல்வர். பலர் வயிற்றோட்டம், கண்வலி, நிமோனியா போன்ற நோய்களில் அவதியுற்றனர். பிறப்பு விகிதாச்சாரத்தை விட, இறப்பு விகிதாச்சாரம் மேலோங்கியது. வியாதியில் உள்ளவர்களை பணியில் அமர்த்தும்படி, காவலில் வைக்கப்பட்டிருந்த Dr. ஸ்ரீஃபன் ஜோன்ஸ் அவர்களிடம் கூட்டிவந்து பணிசெய்ய தகுதியானவர்கள் என்று கூறும்படி கட்டாயப்படுத்துவார்கள். உண்மையில் பணிக்குச் செல்லக்கூடாதவர்களுக்கு அனுமதியளிக்க மறுத்துவிடுவார் Dr. ஸ்ரீஃபன் ஜோன்ஸ். இதனால் ஆத்திரமடைந்த ஜப்பானியர் அவரை வேண்டுமென்றே சுட்டுக் கொன்றார்கள். அவர் இறந்த பிறகும் சிறு மருத்துவ பணியினை இரண்டாம் உலகப் போர் முடியும் வரை அவரது மனைவி திருமதி ஐவி ஜோன்ஸ் ஆற்றி வந்தார்கள்.

போர்க்காலத்தின் கொடூரம் ஆரம்ப நிலையில் இருந்த பொழுது, ஆயர் ஜாண் ரிச்சட்ஸனுக்கு துன்ப வேளையில் ஆறுதலாக இருக்கும்படி, எத்தல் (Ethel), ஜாண் ரிச்சட்ஸன்னை திருமணம் செய்து கொள்ள முன்வந்தார். இவர்களது திருமணம் 1943-ஆம் ஆண்டு மே 6-ஆம் நாள் நடைபெற்றது.

1943 ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் நாள் நேசநாடுகளின் விமானங்கள் நிக்கோபாரில் நங்கூரம் இடப்பட்டிருந்த ஜப்பானின் சரக்குக் கப்பலின் மீது குண்டு வீசி தாக்கின. ஆகவே ஆங்கிலம் பேசக் கூடிய நிக்கோபாரிகளையும், வியாபாரிகளையும் ஜப்பான் கடற்படையினர் விசாரணைக்குட்படுத்தினர். அக்டோபர் 2-ஆம் தேதியில், நேசநாடுகள் நடத்திய வான் தாக்குதலில், நிக்கோபாரில் பலத்த சேதம் ஏற்பட்டது. முக்கியமாக இராணுவ தளமாக உருவாக்கப்பட்டு வரும் மலக்கா கிராமமும், லபதி (Lapathi) கிராமமும் தாக்குதலுக்குள்ளானது. ஆகவே ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டனர். லபதி கிராமத்தின் தலையாரியான தாமஸ் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவரது வீடும் ஜப்பானியர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

ஒருநாள் ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் அவர்களை ஜப்பானிய அதிகாரிகளுக்கு முன்னால் ஆஜராகும் படி அழைக்கப்பட்டு அவரிடம்: "நாங்கள் நிக்கோபாரில் கிறிஸ்தவ முத்திரை இல்லாதவாறு அழித்து விடுவோம். எங்களுடைய மேன்மை பொருந்திய பேரரசர் இத் தீவுகளை தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். ப்ரிட்டிஷ்காரர்கள் இனி ஒருபோதும் திரும்பி வரமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் திருவிவிலியம் வைத்துள்ளார்கள். அவைகளை நாங்கள் தீயிலிட்டு அழிக்க இருக்கிறோம். ஆகவே அவைகளை எங்களிடம் ஒப்படைக்கும் படிக் கூறுங்கள்", என்றனர்.

ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் அவர்களிடம்: **"அவர்கள் விரும்பி வைத்திருக்கின்ற பொக்கிஷத்தை உங்களிடம் சமர்பிக்கும் படி என்னால் கூற முடியாது"** என்றார். இப்பதில் ஜப்பானியர்களுக்கு மகிழ்சியைத் தரவில்லை. ஆயர் ரிச்சட்ஸன் மரண தண்டனையை எதிர்பார்த்தார்.

நிக்கோபாரிய கிறிஸ்தவர்கள் தென்னை மரத்தின் மேலும், தரையில் புதைத்தும் திரு விவிலியத்தைப் பாதுகாத்தார்கள். திரு விவிலியங்கள் தீக்கிரையாக்கும் படிக் கிடைக்காததால் ஜப்பானியர்கள் ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் மீது கோபமுற்றார்கள்.

இரண்டாம் உலக போர் முடியும் வரை பெரிய பட்டாளத்தை ஜப்பானியர் நிக்கோபாரில் வைத்திருந்தனர். நீரில் மிதக்கக் கூடிய நீர்-விமான தளத்தையும் உருவாக்கும் முயற்சியில் இருந்தனர். வதை முகாம்களில் (concentration camp) இருந்த கைதிகளுக்கும், தங்கள் படையினருக்கும் தேவையான விளைபொருட்கள் நிக்கோபாரின் விளைநிலங்களால் வழங்க கூடாததாக இருந்தது.

போட் ப்ளயரில் இருந்த ப்ரிட்டிஷ் அதிகாரிகளை தத்தம் தலை மறையும் வரை குழிகளை வெட்ட வைத்து, அவர்கள் அவ்வாறு வெட்டி முடித்த உடன் அவர்கள் துப்பாக்கிச் சூரிகை (bay-onet) கொண்டு பல இடங்களில் குத்தி சிந்திரவதை செய்த பின் சுட்டுக் கொன்றார்கள். ஜப்பானியர்கள் நிக்கோபாரிகள் தம் குடும்ப தேவைக்காக வைத்திருந்த தேங்காய்களையும், பன்றிகளையும், வாழைக்குலைகளையும், சேனைக்கிழங்குகளையும், கோழிகளையும், ஆடு, மாடுகளையும் அபகரித்துக் கொள்வார்கள்.

Earl மவுண்ட்பேட்டன் கீழ் இயங்கிவந்த கிழக்குக் கப்பல் படையினரின் விமானங்கள் 'தாக்கி விட்டு ஓடுதல்' போன்ற தாக்குதலை அதிகப்படுத்தினார்கள்; முக்கியமாக கார் நிக்கோபார் தீவும், நன்குவாரி தீவும் அதிக தாக்குதலுக்குட்படுத்தப்பட்டது. ஆயர் ஜாண் ரிச்சட்ஸன், எரியும் மத்தாப்பு விளக்குகளை (flaring lights) வானில் ஏவி நேசநாட்டு விமானங்களுக்கு தாக்குதல் நடத்த வேண்டிய இடங்களை அடையாளம் காட்டுவதாக குற்றம் சுமத்தி தமலூ (Tamaloo) கிராமத்திலிருந்த வதை முகாமுக்கு கொண்டு சென்றனர். இதேபோன்ற குற்றத்திற்காக பல நிக்கோபாரிகள் வதை முகாம்களில் துன்புறுத்தப்பட்டனர். ஆனால் யாரும் இரவில் ஒளிதரும் ஆகாசவானங்ளை (rocket) யாரும் பார்த்ததுவும் இல்லை; செலுத்தவுமில்லை.

1944 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள், இந்திய சுதந்திர கூட்டமைப்பின் அங்கத்தினராக இருந்த இந்தியர்கள் 44 பேர் ஹோம்ஃப்ரேகஞ்ச் (Homfreyganj) என்னும் இடத்தில் வேவு பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி சுட்டுக் கொல்லப்பட்டனர். இதை ஹோம்ஃப்ரேகஞ்ச் படுகொலை என வரலாற்றில் பெயரிடப்பட்டது.

1945-ஆம் ஆண்டு ஜுலையில் நிக்கோபார் தீவின் மீது கப்பலில் இருந்தும், வான்வழியாகவும் தாக்குதலை நேசப்படைகள் அதிகப்படுத்தினார்கள். இதனால், நிக்கோபாரியர்களும், மற்ற வியாபாரிகளுக்கும் மரண தண்டனை கொடுக்கப்பட்டது. 300 ஆட்களை வதை முகாமிற்கு கொண்டு சென்று, அவர்கள் பதுங்கு குழிகள் வெட்டுவதற்கும், வான்வழித் தாக்குதலிருந்து தப்ப

தங்கிடங்களையும் (air-raid shelters) உருவாக்கவும், காட்டிலிருந்து மூங்கில்களை வெட்டி வரவும், ஜப்பான் படையினர் தங்க மூங்கில் வீடுகளைக் கட்டவும் பயன்படுத்தப்பட்டார்கள்.

நிக்கோபாரின் ஜப்பானியத் தலைவனான உடா (Ueda), தினமும் இரவு வேளைகளில் தீவிலிருந்து ஆகாசவானங்களை வானில் பார்க்க முடிகிறது. திரு. ஸ்காட் 300 ஆகாசவானங்களை உளவாளி ஜாண் ரிச்சட்ஸன்னிடம் கொடுத்துச் சென்றிருக்கிறார். ப்ரீட்டிஷார் மீண்டும் வரும் பட்சத்தில் ஒருவர் தலை கூட மிஞ்சாது என்றும்; மரங்களின் இலைகள்கூட சுட்டெரிக்கப்படும் என்று கூறி மிரட்டினார்.

ஆயர் ஜான் ரிச்சட்ஸன் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். இருமுறை மரணதண்டனை கொடுக்கப்பட்டது. முதல் முறை அவரை கொல்ல முடிவுசெய்த பின்னர், கக்னா (Kakana) கிராமத்தின் தலையாரியான எட்வட் கு-சாட் (Edward Kuchat) அவர்களை அழைத்து, ‘உங்களை இத்தீவின் தலைமைத் தலையாரியாக ஜாண் ரிச்சட்ஸ்னை கொன்றபின்னர் நியமிக்க இருக்கிறோம்’ என்று கூறினர். எட்வட் கு-சாடோ அவ்வாறு நீங்கள் செய்யும் பட்சத்தில் கலவரம் வெடிக்கும். நாங்கள் 10,000-பேர் இருக்கிறோம். கலவரம் வராமல் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரே ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் தான் என்று எச்சரித்தார்.

இப்படிப்பட்ட தைரியமான பதிலால் திக்குமுக்காடிப்போனான் ஜப்பானிய தலைமைப் படைத்தலைவன். ஆகவே ஆயர் ஜாண் ரிச்சட்ஸ்ன்னின் மரணதண்டனை ஒத்தி வைக்கப்பட்டது. நிக்கோபாரிகள் ஒருவருக்கு எதிராக மற்றவரைத் தூண்டி, ஒருவரையொருவர் பொய்யாகக் காட்டிக்கொடுக்கவும், ஒருவரையொருவர் தாக்கவும், கொல்லுவதற்குமான சந்தர்ப்பங்கள் ஜப்பானியர்களால் உருவாக்கப்பட்டது. நேசநாடுகளின் ஒவ்வொரு வான்வழித் தாக்குதலுக்குப் பின்னர், அதிகமான கொடுமைகளை நிக்கோபாரிகள் அனுபவிக்க நேரிட்டது.

உணவு தட்டுப்பாடு அதிகமாகவே, ஜப்பானிய படையினர் வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாதவர்களை ஒழித்துக்கட்ட திட்டமிட்டார்கள். ஜாண் ரிச்சட்ஸனின் குடும்பத்தில் பலரையும் மற்ற கைதிகளையும், உணவு கிடைக்கக்கூடிய வதை முகாமுக்கு மாற்றுவதாகக் கூறி, ஒருவருக்கும் தெரியாமல் அவர்களைக் கொன்று போட்டார்கள்.

போருக்கு முன்னர், கார் நிக்கோபாரில் 500 பேர் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். இதில் 104-பேர் அடித்தும், தீயிக்கிரையாக்கியும் கொல்லப்பட்டனர். இப்படிக் கொல்லப்பட்டதில் ஆயர் ஜாண் ரிச்சட்ஸ்னின் மகனும் ஒருவர். உணவு கிடைக்கும் வதை முகாமுக்கு மாற்றுவதாக கூறி கூட்டிச்சென்று கொல்லப்பட்டவர்களில், இவருடைய மைத்துனர், மருமகன், தம்பி மகன், மற்றும் பல நெருங்கிய உறவினர்கள் பலர் அடங்குவர்.

இத்தகைய தனிப்பட்ட இழப்பை ஆயர் ஜாண் ரிச்சட்ஸ்ன் சந்தித்திருந்தாலும், நிக்கோபாரிகளுக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் அளித்துக் கொண்டே இருந்தார். இவருடைய தலைமையில், நிக்கோபாரிகள் தங்கள் ஈடுஇணையற்ற விரிதிறனையும் (resilience), போரின் கோரத்தில் தப்பிப்பிழைக்கும் வழிமுறைகளையும் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆகவே, மீண்டும் மரணதண்டனை வழங்க முடிவு செய்தார்கள். இந்தமுறை, அமெரிக்கா ஜப்பான் மீது வீசிய அணுகுண்டுகள் அவரை மரணத்தில் இருந்து காப்பாற்றியது. 1945-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் ஜப்பான் நிபந்தனையற்ற முறையில் நேசநாட்டுப் படைகளிடம் சரணடைந்தது.

**நிக்கோபாரின், தயவான ஒளி:**

1941-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி, நிக்கோபார் முழுமைக்கும், மொத்தம் 1000 பேர் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். ஜப்பானிய ஆக்கிரமிப்பின் போது, ஆயர் ஜாண் ரிச்சட்ஸன் நிக்கோபார் மக்களுக்கு ஆச்சரியமளிக்கும், அற்புதமான தலைமையைக் கொடுத்தார். மேலும் கிறிஸ்தவர்கள் தங்கள் சோதனைகளை, மிகவும் விதிவிலக்கான தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொண்டது இயேசுவைப் பின்பற்றாதோருக்கு விந்தையாக இருந்தது. போர் முடிவடைந்தவுடன், கிராமம் கிராமமாக தேவாலயத்தில் சேர வந்தனர். இயேசுவைப் பின்பற்றாத



நிக்கோபாரிகள், இயேசுவைப் பின்பற்றுபவர்கள், தங்கள் எதிரி மீது அன்பு கொள்ளும் உறுதியுடன் மரணத்தை எதிர்கொண்ட விதத்தில் வித்தியாசமான ஒன்றைக் கண்டார்கள்; அதுவே அவர்கள் கூட்டம் கூட்டமாக இயேசுவைப் பின்பற்ற தூண்டுதலாக அமைந்தது. அப்போதைய இரங்கூன் பேராயராக இருந்த ஜார்ஜ் அல்கொர்னான் வெஸ்ட்-இன் (George Algernon West) மனைவி திருமதி கிரேஸ் ஹே வெஸ்ட் (Grace Hay West), கார் நிக்கோபார்

பற்றிய தனது புத்தகத்தில், போருக்குப் பிறகு உடனடியாக கார் நிக்கோபார் தேவாலயத்தின் அபரிமிதமான வளர்ச்சியைப் பற்றிய ஒரு வரைபட விளக்கத்தை (graphic description) அளித்துள்ளார். 1947-ஆம் ஆண்டிலிருந்து 1950-ஆம் ஆண்டு வரை பேராயர் G. A வெஸ்ட் மூன்றுமுறை நிக்கோபார் வந்து, ஒவ்வொரு முறையும் 800 பேருக்கு திடப்படுத்துதல் கொடுத்தார்.

பின்னர் இவர் இரங்குன் தூய திருத்துவ பேராலயத்தின் நேரடிப் தொடர்புடைய ஆயராக (Canon) அறிவிக்கப்பட்டார். இவருக்கு உதவியாக மூவர் ஆயராக அருட்பொழிவு பெற்றனர். சோதனை காலத்தில், 104 பேர் இயேசுவை பின்பற்றுவோர் சமயத்திற்காக உயிர் துறந்து தியாகிகளான பிறகு, புதிய இயேசுவை பின்பற்றும் நிக்கோபார் உருவானது; தடுக்க முடியாத அளவில் மதமாற்றங்கள் நிகழ்ந்தது ஒரு வெற்றியே!

1920-ஆண்டு முதல் 1933-ஆண்டு வரை ஜாண் ரிச்சட்ஸன் துறைமுக பாதுகாவலர் (Conservator of Port) பணியிலும், 1925-ஆம் ஆண்டிலிருந்து, 1945-ஆம் ஆண்டு வரை பொறுப்பு உத்தியோகமாக தாசில்தாராகவும் (Officiating Thasildhar), 1947-ல் பள்ளித் தலைமையாசிரியராகவும், கௌரவ தாசில்தாராகவும், ஆங்கிலேய அரசு நியமித்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கான அரசாங்க அதிபராக முதல் தர மாஜிஸ்திரேட் அதிகாரத்துடன் செயல்படும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். உண்மையில் அவருக்கு நிரந்தர தாசில்தார் பதவியும் வழங்கப்பட்டது. ஆனால் அரசுப் பதவிகளில் கிடைத்த எந்த உயர்வு வாய்ப்புகளும் அவருடைய மனதில் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. உலகம் தரும் சுக வாழ்விற்கெதிராக தனது முகத்தை எப்பொழுதுமே வைத்திருந்தார், ஏனென்றால் அவர் நிச்சயமாக தனது முழு வாழ்க்கையையும் திருச்சபைக்காகவும், நிக்கோபார் மக்களின் சேவைக்காக கொடுக்க முடிவு செய்திருந்தார். கனம் ஜாண் ரிச்சட்ஸன்னின் வழிகாட்டுதலுக்காகவும் ஆலோசனைக்காகவும் நிக்கோபார் தீவில் உள்ள அனைவருமே அவரை எதிர்நோக்கியிருந்தது நிக்கோபாரிகள் அவரது மேல் வைத்திருந்த மரியாதைக்கான அடையாளம்.

பின்னர் கனோன் ஜாண் ரிச்சட்ஸன் 1950-ஆம் ஆண்டு கல்கத்தா தூய பவுல் பேராலயத்தில் பெருநகர பேராயர் (Metropolitan Bishop) ஜார்ஜ் ஹப்பேக்கால் (George Hubback) கல்கத்தா மறைமாவட்டத்தின் உதவி பேராயராக புனிதமாக அர்ப்பணம் செய்யப்பட்டதுவும், நிக்கோபாரின் அனைத்து தீவுகளுக்கும் இயேசுவின் நற்செய்தி கொண்டு செல்லப்பட்டதுவும், நிக்கோபாரில் சுய ஆதரவு திருச்சபைகளை ஏற்படுத்தியதுவும், கிராம பஞ்சாயத்துகளை வலுப்படுத்தியதும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் நிக்கோபாரின் வர்த்தகத்தால் நிக்கோபார் மக்களே பயன்பெறும் வகையில் கார் நிக்கோபார் தீவில் எல்லான் ஹினெங்கோ லிமிடெட் (EHL), என்ற நிறுவனத்தையும், நன்குவாரி தீவில் மனுலா மத்தாய் லிமிடெட் (MML) நிறுவனத்தையும் ஆரம்பித்ததுவும், 1952-ஆம் ஆண்டு இந்திய மக்களின் அதிபரால் நாடாளுமன்ற (லோக் சபா) உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதுவும், நாடாளுமன்றத்தில் 'அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் (பழங்குடியினரின் பாதுகாப்பு) ஒழுங்குமுறை சட்டத்தை (ANPATR) 1956-ல் நிறைவேற்றியதுவும், 1961-ஆம் ஆண்டு உள்துறை அமைச்சரின் (அந்தமான் நிக்கோபார் முதன்மை ஆணையாளர் தலைமையிலானது) ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கபட்டதுவும், 1974-ஆம் ஆண்டு நிக்கோபாரில் அவர் ஆற்றிய சமூகச் சேவைக்காக இந்திய அரசால் பத்மபூஷன் பட்டம் வழங்கப்பட்டதுவும் ஒரு வரலாறே!

**முடிவுரை:**

இவ்வரலாற்று நாயகனைப் பற்றிய ஓர் ஆய்வு நூலை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கிறேன். வட இந்திய திருச்சபை (C.N.I.) இவரை மறந்திருக்கலாம்; S.P.G. நற்செய்தி சங்கத்தார் இவரையும் அத்தமானின் அப்போஸ்தலர் வேதப்பன் சாலோமோனைப் பற்றிய குறிப்புகளை வெளியிடாமல் இருந்திருக்கலாம்; கேன்டர்பரி திட்டத்தில் (Canterbury Project) பேராயர் ஜாண் ரிச்சட்ஸன்னைப் பற்றி ஆங்கிலிகன் இறை கூட்டமைப்பு (Anglican Communion) ஆவணப்படுத்தாமல் விட்டிருக்கலாம்; ஆனால் இன்றும் இவர் நிக்கோபாரின் தந்தை என்று இயேசுவை பின்பற்றுவோரும் மற்றவர்களும் போற்றுகிறார்கள்.

✦ ✦ ✦

**G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....**

**'வரலாற்றுச் சுவடுகள்'**
**– மாத ஆய்விதழுக்கென்று G-pay (Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள்,**
**91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம்.**
**நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு,**
**அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ,**
**அல்லது**
**இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com**
**மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.**



# துன்பங்களை மேற்கொண்ட மிஷனெரிகள் பின்பற்றிய வழிமுறைகள்

ஜே.ஜான் ஞானராஜ்
ஆசிரியர், திருநெல்வேலி

தென் தமிழகத்தில் நற்செய்தி பணியாற்றிய கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகள் சபைகளுக்கும், சபையாருக்கும் பிற மதத்தவரிடமிருந்து துன்பங்கள் ஏற்படுகிற சூழ்நிலையில் தங்களது வலிமையான ஆதரவை சபைகளுக்கும், சபை மக்களுக்கும் பல்வேறு வழிகளில் தந்து கிறிஸ்தவ வாழ்வியலில் இருந்து அவர்கள் பின்வாங்கி விடாதபடி காத்துக் கொண்டார்கள். அதற்கென அவர்கள் பின்பற்றிய சில வழிமுறைகளை, மாதிரிகளை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காண்போம்.

ஆட்சியாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் ஆகியோரிடம் கொண்டிருந்த நல்லுறவு.

**தூய.சவேரியார்**

தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த மீனவ பரதவ சமூகத்தின் நாட்டாமைகளான பட்டங்கட்டியார்கள் திருமுழுக்கு பெற்றிருந்த நிலையில் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட மீனவ பரதவ சமூகத்தினருக்கு நற்செய்தி அறிவித்து திருமுழுக்கு கொடுத்ததோடு ஒரே மாதத்தில் மேற்கு கடற்கரையோரத்தில் வாழ்ந்த சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ முக்குவ சமுதாயத்தினருக்கு முதன்முதலாக நற்செய்தி அறிவித்து திருமுழுக்கு கொடுத்த தூய.சவேரியார் அவர்கள் அக்காலத்தின் தென் தமிழக மற்றும் தென் திருவாங்கூர் சமஸ்தான ஆட்சியாளர்கள் உயர் அலுவலர்கள் ஆகியோரோடு நல்லுறவை கொண்டிருந்தார்.

1541 முதல் 1549 வரை கொல்லம் முதல் கன்னியாகுமரி வரை ஆட்சி செய்த உன்னி கேரளவர்மன் என்ற ராமவர்மன் அரசரோடு நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். இவரோடு நெருங்கிய நட்புறவு இருந்தமையால் அந்தப் பகுதியில் கிறிஸ்தவ நற்செய்தியை அறிவிப்பதற்கு தூய சவேரியாருக்கு திறந்த வாசல் இருந்தது. கயத்தாரை ஆட்சி செய்த பிற்கால பாண்டிய அரச வழி மரபினரான வெட்டும் பெருமாள் பாண்டியன் மற்றும் மதுரையை தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்த விஜயநகர ஆட்சியாளர்கள் ஆகியோர் மூலம் கடலோர கிறிஸ்தவ மீனவர்கள் தாக்கப்பட்ட போது உன்னி கேரள வர்மன் அரசரின் எல்லை கிராமமாக இருந்த புன்னைக்காயல் கிராமத்தை நோக்கி அவர்கள் வந்த போது வந்த அனைவருக்கும் அந்த கிராமத்தில் அடைக்கலம் கொடுத்து உன்னி கேரளவர்மன் ஆதரித்து வந்தார். கோட்டாரில் தேவாலயம் அமைக்க கேரள மன்னர் நிலம் வழங்கியதோடு தூய சவேரியார் நற்செய்தி அறிவிக்க

முழு அனுமதியும் வழங்கினார்.

**வீரமாமுனிவர்**

வீரமாமுனிவருக்கு 1735 இல் இஸ்லாமிய படைத்தளபதி ஒருவரின் மூலம் கர்நாடக நவாப்பாக இருந்து வட தமிழகத்தை ஆட்சி செய்து வந்த சந்தாசாகிப்புடன் நல்ல நட்புறவு ஏற்பட்டது. சந்தாசாகிப்புடன் நன்கு பழகுவதற்காகவே வீரமாமுனிவர் ஹிந்துஸ்தானி மொழியையும், பெர்சிய மொழியையும் சிறப்பாக கற்று தேர்ந்திருந்தார். வீரமாமுனிவரின் மொழி அறிவையும் பேச்சுத் திறமையையும் கண்ட சந்தாசாகிப் அவரை நண்பராக ஏற்றுக் கொண்டார். இந்த நட்புறவின் காரணமாக வட தமிழகம் எங்கும் கிறிஸ்தவ நற்செய்தியை சிறப்பாக அறிவிக்க முடிந்தது.

**தந்தை.ட்ரிங்கால் அடிகள்**

தந்தை.ட்ரிங்கால் அடிகளாருக்கு சேத்தூர் கொல்லங்கொண்டான் ஜமீன்தார்களோடு நல்ல நட்புறவு இருந்தது ஜமீன்தாரால் ஒடுக்கப்பட்டு வந்த இராஜபாளையம் அருகிலுள்ள சுந்தரநாச்சியார்புரம் கிராமத்தவருக்காக ஜமீன்தார்களோடு பேசி ஜமீனுக்குட்பட்டிருந்த கிராமத்தாரின் நிலங்கள், வயல்கள், பனங்காடுகள் ஆகியவற்றை விலை கொடுத்து வாங்கி அந்த கிராமத்து மக்களுக்கு அவற்றை இலவசமாக வழங்கி ஜமீனின் அடிமைத்தனத்திலிருந்து அந்த கிராமத்தாருக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். அந்த கிராமத்தார் அனைவரும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

**தந்தை.லெவே அடிகளார்**

இராமநாதபுரத்தில் தந்தை.லெவே அடிகளார் சுமார் 13 ஆண்டுகளாக இறைப்பணி ஆற்றினார்கள். ராமநாதபுரம் சேதுபதி அரசர்களோடு தந்தை.லெவே அடிகளார் கொண்டிருந்த நட்புறவு ராமநாதபுரத்தில் கத்தோலிக்க திருச்சபை இறைப்பணியும் கல்விப் பணியும் செய்வதற்கு பேராதரவாக இருந்தது.

**தந்தை ஷ்வார்ட்ஸ் ஐயரவர்கள்**

தந்தை ஷ்வார்ட்ஸ் ஐயரவர்களுக்கு ஆங்கிலேய ஆட்சியாளர்களுடனும், ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவரும் ஸ்ரீரங்கப்பட்டணத்தை தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி புரிந்த கர்நாடகா ஆட்சியாளரும் அக்கால தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து வந்தவருமான ஹைதர் அலி உடனும் நெருங்கிய நட்புறவு இருந்தது. அந்த நட்புறவின் காரணமாக ஹைதர் அலி ஆட்சி செய்த பகுதியில் தந்தை ஷ்வார்ட்ஸ் ஐயரவர்களால் நற்செய்திப் பணியை சிறப்பாக அறிவிக்க முடிந்தது. இருதரப்பாருக்கும் நடுவராக தந்தை ஷ்வார்ட்ஸ் ஐயரவர்கள் இருந்தால் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் ஷ்வார்ட்ஸ் ஐயரவர்களால் நற்செய்திப் பணியை சிறப்பாக அறிவிக்க முடிந்தது.

**கனம்.ரேனியஸ் ஐயரவர்கள்**

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களுக்கு திருநெல்வேலி மாநகரின் முக்கிய பிரமுகர்களாக அக்காலத்தில் விளங்கிய பெரும் பணக்காரர்களான சுலோச்சனா முதலியார் வெங்கு முதலியார் ஆகியோரோடு நல்ல நட்புறவு இருந்தது. வெங்கு முதலியார் அவர்கள் தற்போதைய திருநெல்வேலி பாளையங்கோட்டை இடையிலான நெடுஞ்சாலையின் இருபுறமும் ஏராளமான ஏக்கர் நிலங்களைக் கொண்டிருந்தார் அவற்றில் ஒரு பகுதியை குறைந்த விலைக்கு C.M.S தலைமை மிஷனரி ரேனியஸிற்கு C.M.S மிஷன் சங்கத்திற்காக கொடுத்தார். அவரும் சுலோச்சனா முதலியாரும் கனம்.ரேனியஸின் கல்விப் பணிகளுக்கு பொருளாதார உதவி செய்தனர்.

**உபத்திரவங்கள் ஏற்பட்ட பகுதியில் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ மிஷன் கிராமங்கள்**

தஞ்சாவூர் டெல்டா பகுதியில் உடையார் எனும் குறுநில அரசரால் 1712 இல் கிறிஸ்தவர்களுக்கு துன்பங்கள் அதிகமாக கொடுக்கப்பட்ட போது பல கிராமங்களில் இருந்து கிறிஸ்தவர்கள் வெளியேறினார்கள். சிதறி வெளியேறிய கிறிஸ்தவர்களை வரவழைத்து ஒன்றுபடுத்திய வீரமாமுனிவர் அவர்கள் அனைவரையும் எயிலூர் எனும் ஆரியனூரில் ஒன்று கூட்டி அங்கு தங்கச் செய்து கிறிஸ்தவ குடியிருப்பை உருவாக்கி அவர்களுக்கு தேவாலயத்தையும் கட்டிக் கொடுத்து அவர்கள் மத்தியில் குடிசை வீடு அமைத்து அவர்களில் ஒருவராக வீரமாமுனிவர் வாழ்ந்தார்.

தஞ்சாவூர் ஷாஜி மன்னரால் தஞ்சாவூரில் இருந்த 12 ஆயிரம் கிறிஸ்தவர்கள் வெளியேற்றப்பட்டு விரட்டப்பட்டார்கள். அவர்கள் அனைவரையும் வரவழைத்து ஒன்றுபடுத்தி ஏலாக்குறிச்சியில் அவர்களை குடியமர்த்தி அந்த இடத்திற்கு திருகாவலூர் என பெயரைக் கொடுத்து கிறிஸ்துவ குடியிருப்பை உருவாக்கினார்.

1798 - 1806 க்கு உட்பட்ட காலகட்டங்களில் S.P.C.K. மிஷன் தென் தமிழகத்தில் இறை பணி செய்த போது உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களின் பாதுகாப்புக்காக முதலூர், பெத்லகேம், எருசலேம் ஆகிய கிறிஸ்தவ கிராமங்கள் உருவாக்கப்பட்டது. S.P.C.K.மிஷனின் ஊழியத்தால் சான்பத்து கிராமத்தில் இருந்த 35 குடும்பங்களும் கிறிஸ்தவர்களான போது சான்பத்து நாசரேத் என்ற பெயரை பெற்றது. சாமுவேல் சாயர் அவர்களின் நன்கொடையால் வாங்கப்பட்ட நிலத்தில் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவக் கிராமம் சாயர்புரம் எனப்பட்டது.

கனம். ரேனியஸ் ஐயர் அவர்களின் ஊழியப் பணிக்காலத்தில் (1820 - 1838) உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களின் நலனுக்காக 25 மிஷன் கிராமங்கள் அவரால் உருவாக்கப்பட்டது.

அக்காலத்தில் தென் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்காக L.M.S மிஷனெரி சங்கத்தாரால் மிஷன் குடியிருப்பு என்ற பெயரில் பல கிராமங்கள் உருவாக்கப்பட்டது.

**மிஷனெரிகள் செய்த சட்டரீதியான உதவிகள்**

**கழுகுமலை வழக்கு**

1896 இல் கழுகுமலையில் கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயத்தின் முன்பு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கழுகுமலை கோயில் தேர் பவனி வருகையில் தேர் மோதியது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பெரும் கலவரத்தில் அப்பாவி கிறிஸ்தவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சிலர் மரணம் அடைந்தனர் பலர் படுகாயமுற்றனர். இந்நிலையில் ஜமீன்தாரின் முயற்சி காரணமாக அப்பாவி கிறிஸ்தவர்கள் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்கள் தந்தை கௌசானல் அடிகளாரின் உதவியை நாடினார்கள். கௌசானல் அடிகளார் அவர்களுக்கு சிறந்த வழக்கறிஞர் ஒருவரை ஒழுங்கு செய்து தாமே முன்னின்று வழக்கை நடத்தி வழக்கில் கிறிஸ்தவர்களுக்கு வெற்றி கிடைக்கச் செய்தார்.

கௌசானல் அடிகளாரின் இந்த உதவியை நன்றியோடு நினைவு கூர்ந்து கழுகுமலை மில் நாடார்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

**இடையன்குளம் வழக்கு**

திருநெல்வேலி மாவட்டம் இடையன்குளம் கிராம சபையாரின் நிலங்கள் சுப்பிரமணியபிள்ளை மற்றும் ஓமநல்லூர் பத்தமடையாபிள்ளை ஆகியோரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சபையாரின் வீடுகளுக்கு அவர்கள் தீவைத்ததோடு விளைபொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இதனால் இடையன்குளம் சபையார் அவ்விருவரையும் எதிர்த்து திருநெல்வேலியிலிருந்த மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றி பெற்றனர். அவ்விருவரும் அக்காலத்தில் திருச்சியிலிருந்த மாநில நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்ததால் அப்பீல் வழக்கை சந்திக்கும் சூழல் ஏற்பட்டது. அப்பீல் வழக்கை நடத்த மிஷனெரி கனம். ரேனியஸ் உதவியாக இருந்தார். அப்பீல் வழக்கால் இடையன்குளம் சபையாருக்கு பெரும் பொருட்செலவு ஏற்பட்டது. பொருட்செலவின் மத்தியில் வழக்கில் ஆண்டவர் வெற்றி தந்தால் தங்களது ஊர் நிலத்தில் 1/6 பாகத்தை தம் ஊர் C.M.S மிஷனுக்கு எழுதிக் கொடுப்போம் என பொருத்தனை செய்து ஜெபித்தனர். வழக்கில் வெற்றி கிடைத்தது. தாங்கள் செய்த பொருத்தனைப்படி 1/6 பங்கு நிலத்தை மிஷனுக்கு கொடுத்தனர். சுப்பிரமணியபிள்ளை, ஓமநல்லூர் பத்தமடையாப்பிள்ளை ஆகியோரால் மீண்டும் இடையன்குளத்தாரின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டு விளைபொருள் கொள்ளையடிக்கப்பட்டதைக் கண்ட கனம்.ரேனியஸ் ஐயரவர்கள் உதாரமும் வீரமும் மிக்க தலைமை உபதேசியார் தாவீதை இடையன்குளத்திற்கு அனுப்பினார். அவர் இடையன்குளம் வந்து சேர்ந்தது முதல் இருவராலும் ஏற்பட்ட இடையூறுகள் நின்றது.

**தற்காப்பு கலைகள் மூலம் பாதுகாப்பு**

பிற மதத்தவரிடமிருந்து வருகிற தொடர் நெருக்கடிகள் துன்பங்களிலிருந்து திருச்சபை மக்களை பாதுகாக்க, தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ள சுதேச சபை ஊழியர்கள் ஊக்கப்படுத்தி அவற்றை கற்றுக்கொடுத்தனர்.

1799 இல் தாவீது சுந்தரானந்தம் உபதேசியாரின் பெரும் முயற்சியால், எவரெட் அவர்களின் பண உதவியால் சாத்தான்குளத்திலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள அடையல் கிராமத்தையொட்டி பெரிதானதோர் நிலம் வாங்கப்பட்டு உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ கிராமமான முதலூரில் தாவீது சுந்தரானந்தம் உபதேசியாரின் முயற்சியால் கட்டப்பட்ட தேவாலயம் இருமுறை தீக்கிரையாக்கப்பட்டது. இதனால் மிகுந்த மனவருத்தம் கொண்ட தாவீது சுந்தரானந்தம் உபதேசியார் அக்கால தென்தமிழகத்தில் சிறந்த சிலம்பாட்ட ஆசிரியரான கற்குவேல் நாடார் மூலம் முதலூர் கிறிஸ்தவ இளைஞர்களுக்கு தற்காப்பு கலையான சிலம்பாட்டத்தை கற்றுக் கொடுக்கச் செய்தார். தாவீது சுந்தரானந்தம் உபதேசியார் தலைமையிலான இந்த சிலம்பாட்டக்குழு ‘தடிக்கம்பு சேனை’ எனப்பட்டது. கிராமங்களில் சிறுபான்மையினராக ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த ‘தடிக்கம்பு சேனை’ பாதுகாப்பு அளித்தது.

**ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உறவுப் பாலமாக மிஷனெரிகள்**

உபத்திரவங்களையும் துன்பங்களையும் பொதுமக்கள் கொடுத்த போதும் ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உறவுப் பாலமாக மதவேறுபாடின்றி மிஷனெரிகள் இருந்தனர். அரசு சார்பிலான சாலை வசதி, சுகாதார வசதி, தொடர் வண்டி வசதி, போன்ற அடிப்படை வசதிகளை அனைவருக்கும் பெற்றுக் கொடுத்தனர். கல்லிடைக்குறிச்சி C.M.S தேவாலயம் அமைந்திருந்த மேல்முகம் நாடார் தெருவில் இந்துக்களும் கிறிஸ்தவர்களுமாகக் கலந்து வசித்து வந்தனர். இருதரப்பாரும் கல்லறைத் தோட்டம் இன்றி இருந்தனர். கல்லிடைக்குறிச்சி கிறிஸ்தவர்களுக்காக கல்லறைத் தோட்ட இடம் கேட்டு அப்போதைய C.M.S தலைமை மிஷனெரியும் District Church Council சேர்மனுமான Rev.E.S.கார் மிஷனெரி அவர்கள் 1910 இல் அப்போதைய அம்பாசமுத்திரம் தாசில்தார் திரு.அன்புடையான் அவர்களிடம் கேட்டுக் கொண்டபோது இருதரப்பாருக்கும் சேர்த்து கேட்டு கல்லறை தோட்டத்திற்கான நிலத்தை கல்லிடைக்குறிச்சியின் மேற்கு எல்லையில் இருதரப்பாருக்கும் பெற்றுக் கொடுத்தார். அடுத்தடுத்துள்ள அந்த இடம் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது.

**உதாரகுணமும் தைரியமும் மிக்க உபதேசிமார்கள்**

இயேசு சபை மிஷனரி தூய அருளானந்தர் அவர்களின் வலதுகரமாக செயல்பட்ட சிலுவை உபதேசியார், S.P.C.K.மிஷன் ஊழியத்தில் தாவீது சுந்தரானந்தம் உபதேசியார், C.M.S மிஷன் ஊழியத்தில் தாவீது உபதேசியார், மிக்கேல் உபதேசியார், தேவசகாயம் உபதேசியார், பாக்கியநாதன் உபதேசியார், என தொடக்க கால மிஷனரிகளின் கீழ் இருந்த உதாரகுணமும் தைரியமும் மிக்க உபதேசிமார்கள் சித்த வைத்தியம், வர்மம், சிலம்பாட்டக்கலை என பன்முகக் கலை திறமைகளையும் பேச்சு சாதரியமும் கொண்டவர்களாக இருந்தனர் அது தொடக்க கால உபத்திரவங்களை சபையார் மேற்கொள்வதற்கு பேருதவியாகக் காணப்பட்டது.



Rev.Dr. **தேவராஜ்**
கூடலூர்

கிறிஸ்துவுக்குள் அன்பான கிறிஸ்தவ வறலாற்றுச் சுவடு வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்து இயேசுவின் புண்ணிய திருப்பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடு மாத இதழ் வரலாறு படைத்து 24 இதழ்களை சிறப்பாக பதிப்பித்து, இரண்டு ஆண்டுகளை நிறைவுச் செய்து மூன்றாம் ஆண்டுக்குள் காலெடுத்து வைத்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். (இன்றோடு 27வது இதழைக் காண்கிறோம்).

மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட வரலாற்றை திசை தெரியாமல் திகைக்காதிருக்கும் திருச்சபையின் திருமக்களின் திரு வரலாற்றை திரு மக்களும் சரி, தெரு மக்களும் சரி அனைவரும் அறிய வரலாற்றுச் சங்கத்தின் பெருமுயற்சியை பாராட்டாமல் இருக்க இயலாது.

அடியாரது திருப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன். இறையாசீர் உண்டாகட்டும். மறைந்திருக்கும் முத்துகளின் வரலாற்று பின்ணியங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் மன்னா செல்வகுமார் அவர்களின் பிற ஆவண பதிவுகளுக்காகவும் நாம் ஜெபிக்க கடமைப்பட்டவர்கள் எனக் கூறி திரு மன்னா செல்வகுமார் அவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து நற்பணியாற்றும் வரலாற்று சங்க பிரதிநிதிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



# உபத்திரவத்தில் உதிர்ந்த மிஷனெரி பொன்மொழிகள்

V. வீர சுவாமிதாஸ் (இயக்குநர், வேதாகம நண்பன்)

**யார் இந்த மிஷனெரிகள்?**

இறைமைந்தன் இயேசுவின் இறைப்பணியில் இதயத்தைக் கொடுத்து இகத்தினை மாற்றிய இறைத்தொண்டர்களே இவர்கள்.

இறைவனோடும், மனிதனோடும், நெருங்கிய தொடர்புகொண்டு கிறிஸ்துவைப் போன்று வாழ்ந்து காட்டியவர்கள். மனிதர்களில் தெய்வீக முதுமையடைந்தவர்கள்.

சொந்தம் பந்தம் துறந்து பிறர் சுமையைச் சுமந்தவர்கள். ஏழ்மை, எளிமை, கற்பு, கீழ்ப்படிதல் ஆகியவற்றை அணிகலன்களாக்கியவர்கள். கிறிஸ்தவ வாழ்வில் திருத்தம் கண்டவர்கள். திருச்சபையை சீர்திருத்தியவர்கள். அகவாழ்விலும் புற வாழ்விலும் புதுமையை புகுத்தியவர்கள்.

இனம், மொழி, நாடு, பண்பாடு மறந்து சமத்துவ சமுதாயத்தைப் படைத்தவர்கள். அடுக்கடுக்கான கொடுமைகளை அனுதினமும் அனுபவித்து, அறியப்படாதவர்களிடமே தம் உயிரை காணிக்கையாக்கியவர்கள். நலிந்தவருக்கு வாழ்வு தந்து, இதயம் உடைந்தவர்க்கு இயேசுவை தந்து, சமுதாயத்திற்கு கல்வியைத் தந்து ஜெபமே வாழ்வாகக் கொண்டு ஜெயம் பெற்றவர்கள்.

காடு, மலை, குகைகளில் வசிப்போரை தேடிச் சென்றவர்கள். மனித வாழ்வின் மகத்துவத்தை மண்ணில் மலரச் செய்தவர்கள். இறை ராஜ்யத்தை இவ்வுலகில் அனுதினமும் கட்டியவர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறியது போல், கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று உறுதிகொண்டு தங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கியவர்கள்.

இவர்களது வாழ்க்கை பொன்மொழிகள் நம் வாழ்வை கிறிஸ்துவில் ஊன்றக் கட்டுவதோடு மட்டுமல்லாமல் நம்மைச் சாதிக்கவும் தூண்டுகின்றன. அப்படிப்பட்ட சில உயரிய அனுபவ வரிகளை உங்கள் உயிர் மீட்சிக்கு தருகின்றேன்.

கிறிஸ்துவுக்குள் எழுந்து பிரகாசியுங்கள்;
எரிந்து பிரகாசியுங்கள்.



**சீகன்பால்கு** (1682-1719)

நான் என்னைக் காத்துக்கொள்ளாமல் உண்மையைக் காத்துக் கொள்ளும் வரைக்கும் இதே மன தைரியத்துடன் இருப்பேன்.



**கால்டுவெல்** (1814 - 1891)

இத்தனை காலங்களும் இந்தியர்களுக்காகவே வாழ்ந்தேன். உயிர் உள்ளளவும் அவர்களுக்காகவே உழைப்பேன். அவர்கள் நாட்டிலேயே உயிர் துறப்பேன்.



**போலிகார்ப்** (69-156)

இந்த 86 வயது வரை எனக்கு எந்த தீங்கும் செய்யாத என் இரட்சகரை நான் எப்படி மறுதலிப்பேன்.



**வில்லியம் கௌடி** (1857-1922)

என்மீது கல்மாரி பொழிந்த இந்த ஈக்காடு கிராமத்தில் ஆண்டவருக்கென ஒரு கற்கோட்டையை நான் கட்டுவேன்.



**ஏமி கார்மிக்கேல்** (1867-1951)

ஓ! தேவனே, உம்முடைய சித்தம் செய்வதே என் மனமகிழ்ச்சி. நீர் என்னிடம் எதைக் கூறினாலும் உம்முடைய கிருபையால் நான் அதைச் செய்வேன்.



**சி.டி. ஸ்டட்** (1862-1931)

சிலர் ஆலய மணியின் சத்தத்திற்குள் வாழ விரும்புகிறார்கள். ஆனால் நானோ நரகத்தின் நுழைவு வாசலில் ஒரு மீட்பு கடையை நடத்த விரும்புகிறேன்.



**ஐடா ஸ்கடர்** (1870-1960)

ஆண்டவரே! இந்தியாவிலேயே நான் இருந்திட வேண்டுமென நீர் விரும்பினால், என் வாழ்நாளெல்லாம் இந்த மகளிருக்காக உதவி செய்திடுவேன்.



**வில்லியம் கேரி** (1761-1834)
கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார், கடவுளுக்காக அரிய காரியங்களை சாதிக்கப்பார்!



**ஜிம் எலியட்** (1927-1956)
தன்னால் இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக்கொள்ள, தன்னால் வைத்திருக்க முடியாத ஒன்றை இழப்பவன் முட்டாளல்ல.



**தேவசகாயம் பிள்ளை**
(1712-1752)
இயேசுவின் மேல் கொண்ட உன்னதமான நம்பிக்கையின் வீரனாக அவருக்காக மடிய நான் தயார்



**கிரஹாம் ஸ்டெயின்ஸ்**
(1941-1999)
எனது தந்தையும் என் சகோதரர்களும் கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு பாத்திரர் என்று கண்ட என் ஆண்டவரைத் துதிக்கிறேன்.
– எஸ்தர் ஸ்டெயின்ஸ் (மகள்)



**ஜார்ஜ் முல்லர்** (1805-1898)
நமக்கு வரும் ஆயிரம் ஆயிரமான துன்பங்களில் சில மட்டுமல்ல, ஒவ்வொன்றும் விசுவாசியின் வாழ்க்கையில் நன்மையை நடப்பிக்கிறது.



**ராக்லாந்து** (1815-1858)
நற்செய்திப் பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச்சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே.



**டேவிட் பிரெய்னார்டு**
(1718-1747)
முழு உலகத்திற்கு என் வாழ்வைக் கொடுக்காமல், என் வாழ்வை இழக்க மாட்டேன்.



**ஹட்சன் டெய்லர்** (1832-1905)
தேவனுடைய வழியில் நடக்கும் தேவ ஊழியத்திற்கு தேவசந்திப்புகள் ஒருபோதும் குறைவாயிருப்பதில்லை.



**ராபர்ட் மாரீசன்** ( 1782-1834)
உலகிலேயே அதிக கடினமான பணிக்களத்தை எனக்குத் தாரும். அங்கே உமக்கென்று ஊழியம் செய்வேன்.



**மார்ட்டின் லூத்தர்** (1483-1546)
வேத வாக்கியங்களின் சாட்சியினால் நான் திருப்தியடையும் வரை அல்லது தெளிவான காரணங்களைக் காணும் வரை நான் பின்வாங்கமாட்டேன்.



**ஜான் ஜி. பேட்டன்**
(1824-1907)
இயேசு கிறிஸ்துவும் அவருடைய ஐக்கியமும் எனக்கு கிடைத்திராவிடில் நான் எப்பொழுதோ பைத்தியக் காரனாகியிருப்பேன்.



**சாது சுந்தர்சிங்** (1889 - )
என்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்காக நான் பாடு அனுபவிப்பது ஒரு மாபெரும் மகிழ்ச்சி.



**பண்டித ராமாபாய்** (1858-1922)
ஒரே ஒரு வாழ்வு தான். அது சீக்கிரம் கடந்துபோகும். கிறிஸ்துவுக்கென்று செய்யப்பட்டது எதுவோ, அதுவே நிலைத்து நிற்கும்.



**ஹென்றி மார்ட்டின்** (1781-1812)
நான் இதுவரை ஒரு தேவ ஊழியனாக மிகவும் குளிர்ந்துபோன நிலையில் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது நான் தேவனுக்கென்று நெருப்பாய் எரிந்து போகட்டும்.

இம் மாபெரும் அருள் தொண்டர்கள் தங்களுக்கு நேரிட்ட இக்கட்டிலும், இடர்பாடுகளிலும், சோதனைகளிலும், வேதனைகளிலும், போராட்டங்களிலும் பெருந்துயரங்களிலும் தங்கள் அழைப்பில் உறுதியாய் நின்றார்கள்.

சத்தியத்தைப் போதிப்போம்
சத்துரு ஆனாலும்
சத்தியத்தின் வழி நடப்போம்
சாவே வந்து நேரிடினும்

என வார்த்தையாலும் வாழ்க்கையாலும் வாழ்ந்து காட்டினார்கள். இவர்களின் வாழ்க்கை மொழிகளைப் படிப்பதோடு மட்டுமல்லாமல் நீங்கள் பண்படவும், கிறிஸ்துவுக்குள் பயன்படவும் உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் வாழ்வின் வார்த்தைகளும் பொன்மொழிகளாகட்டும்.

பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். (உபாகமம் 32:7)

என்ற வசனத்தின்படி கடந்த மாதம் 28,29 ஆகிய தேதிகளில் சென்னை ஷெக்கினா அப்போஸ்தல கூடாரம் (Shekinah apostolic tabernacle) சபையின் திருச்சபை மக்கள் தென் தமிழகத்தில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும் இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு திருச்சபையின் பாஸ்டர்.சார்லஸ் சகாயராஜா அவர்கள் தலைமையில் சுமார் 30 (முப்பது) பேர் வந்திருந்தார்கள். அவர்களுக்காக முதல் நாள் டோனாவூர் ஐக்கியத்தில் அவர்களுக்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். அதன் பின்னர் வரலாற்றுச் சங்கம் சார்பில் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ள மிஷன் வரலாற்றுச் இடங்களை சென்று நினைவுபடுத்தி வருவதற்கு ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். அதன் படி முதலாவது பிஷப் சார்ஜென்ட் அவர்கள் பணி செய்த சுவிஷேசபுரம் சென்றோம். அங்கு அருள்திரு.D.வேதன்பு ஐயரவர்கள் அங்கு பணி செய்த மிஷனெரி பணிகளை குறித்தும் அநேக வரலாற்று காரியங்களை குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள்.

அதன் பின்பு திராவிட ஒப்பிலக்கணத்தின் தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் பின்னர் அங்கிருந்து நெல்லையின் முதல் இரத்த சாட்சி தாவீது சுந்தரானந்தம் உருவாக்கின முதல் கிறிஸ்தவ கிராமத்தை பார்வையிட சென்றோம். அவர் 'தடிக்கம்பு சேனை'யின் மூலமாக எப்படி திருச்சபை மக்களை பாதுகாத்தார் என்றும் அவர் செய்த பணிகளையும் பார்த்து விட்டு, இரண்டாம் நாள் குற்றாலம் சென்று 'பாறையடி பங்களா' மற்றும் மிஷனெரிகள் மொழிபெயர்ப்பு பணி செய்த இடங்களை பார்த்து விட்டு நேரே பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர் சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம். சேகர தலைவர் அருள்திரு F.சத்திய சாமுவேல் ஐயா அவர்களும் பெருமன்ற உறுப்பினர் மைகேல் அவர்களும் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். அதன் பின்பு நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். அதன் பின்பு நெல்லை அப்போஸ்தலர் நினைவிடம் சென்று அவர்கள் உருவாக்கிய திருச்சபைகளையும், பள்ளிகளை பற்றிய தகவல்களையும் அவர் ஆற்றிய சமுதாயப் பணிகளையும் நினைவுபடுத்தி பராபரனுக்கு நன்றி சொல்லி வந்தோம்.

ஆசிரியர்











தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

**அ.மாதவையா அவர்களின்**

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

தொடர் –17

மனிதனின் மனம் மீது ஆட்சி செலுத்த நல்ல சக்திகளும் தீய சக்திகளும் சதா அவனைச் சுற்றிக் கொண்டே இருக்கின்றன என்றும், இருந்தபோதிலும் கடவுள் தந்த அறிவைக் கொண்டு நன்றோ தீதோ செய்யுமாறு முடிவு செய்வது மனிதனின் சித்தத்தைப் பொறுத்ததே என்றும் ஆதி பாரசீகர்களிடையே ஒரு நம்பிக்கை உண்டு. ஆதிக் கிறிஸ்தவர்களிடையேயும் அப்படிப்பட்ட ஒரு கருத்து நிலவி வந்தது. துறவு, மடங்களில் வசித்தல், தங்களையே வருத்திக் கொள்ளுதல், அங்கஹீனப்படுத்திக் கொள்ளுதல் இவையெல்லாம் அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது தான்.

“கடவுள் எங்கெங்கே கோவில் கொண்டிருக்கிறாரோ, அங்கெல்லாம் பிசாசும் தனக்கொரு சிற்றாலயம் கட்டிக்கொள்கிறது” என்று பட்லர் எழுதியது. இந்த ஜனரஞ்சகமான கருத்தின் எதிரொலிதான். உலகத்தின் மற்றப் பெரும் சமயங்களிலும் இந்தக் கருத்தை சற்று அழுத்தக் குறைவுடன் காணலாம். புத்தரும் கிறிஸ்துவைப்போல் சோதனைக்கு உட்பட்டார். மகான்கள் மற்றும் தீரபுருஷர்களிடம் இந்தக் கொள்கை மறைந்தோ வெளிப்படையாகவோ இருப்பதை அறியலாம். ஆனால் எல்லா மதங்களுமே ஒன்றுபோல் மனிதன் தான் அவன் செயல்களுக்கு முடிவில் பொறுப்பாவான் என்றே கூறுகின்றன.

வெளிப்புறத்துச் சக்திகள் மனிதனின் செயல்களைப் பாதிக்கின்றனவோ இல்லையோ, ஆத்தும சோதனைக்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் ஓர் அனுபவம் பொதுவானது. உயர்ந்த இயல்புகள் தலை தூக்கி, நன்மையில் தேட்டம் கொண்டு, அந்த வழியில் செல்ல மனமறிந்து முயன்ற உடனேயே எதிர்பாராத இடைஞ்சல்கள் எண்ணிலடங்காமல் எழும்புவதும், ஆனால் தீரமும் விடாமுயற்சியும் இருந்தால் பலன் இல்லாமல் போகாது என்பதும் தான் அனுபவம்.

நரகத்தின் தளம்கூட நல்லெண்ணங்களால் தான் பாவப்பட்டிருக்கிறது என்று ஒரு வாசகம் உண்டு. ஆரம்ப சிரமங்களைக் கண்டு மனிதன் மனம் தளர்ந்து ஒடுக்கமான நீதியின் பாதையை விட்டு விலகி விடுகிறான்; வெற்றி அடைவதற்கு அத்தியாவசியமான மன உறுதியும் திடச்சித்தமும் வெகு சிலருக்கே தெய்வாதீனமாக இருக்கிறது என்பதையே அந்தப் பழமொழி விளக்குகிறது. கெட்ட எண்ணங்களும் தீய நோக்கங்களும் இடம் கிடைத்தால் மளமளவென்று எளிதாகப் பெருக வளர்ந்து விடுகின்றன. அதனால் பெரிய சமயம் ஒன்று மனிதன் பாவத்திலேயே உருவானவன் என்ற கொள்கை உடையதாய் இருக்கிறது.

பரவலான இந்தக் கொள்கை மனித அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தது தான். அதை உறுதிப்படுத்துவது இன்னொரு உதாரணம்போல் அமைந்திருந்தது அமைத்யாவின் குணச் சித்திரம்.

தாம் வகுத்திருந்த பைசாத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக அமாத்யா மாடியிலிருந்து இறங்கி வந்தார். சதியின் மகாத்மியத்தை அந்தப் பெண்ணுக்கு சாங்கோபாங்கமாக எடுத்து உரைத்து அவளை சம்மதிக்கச் செய்யும்படியாகத் தம் மனைவியை ஏவுவதற்காக அவளைத் தேடினார். ஆனால் அந்த அம்மணி கோவிலுக்கு சென்றிருப்பதாகத் தெரிந்தது. பின் கட்டுக்கு வந்தவர் அப்படியே கொல்லைப்புறம் சென்றார். அங்கே மாதவன் திட்டியின் மறுபக்கம் நின்றிருந்த யாருடனோ தாழ்ந்த குரல்ல பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார். தகப்பனாரைத் திடீரெனக் கண்டதும் மாதவன் குழம்பினான். தட்டிக்கு

மறுபுறம் நின்றவள் சாரதா என்பதை அமாத்யா கவனித்தார். அவரைக் கண்டதும் அவள் சரேலென்று உள்ளே சென்று விட்டாள்.

மகனின் குழப்பமும் பயமும் இவர் சந்தேகத்தைத் தூண்டவே 'சாரதாவிடம் என்ன பேசிக் கொண்டிருந்தாய்?' எனக் கேட்டார்.

சற்றுத் தயங்கிய பிறகு, 'பெரியப்பாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று விசாரித்தேன்' என்றான் அவன்.

தகப்பனார் சமாதானம் அடைந்தவர்போல் போய்விட்டதைக் கண்டு மகன் நிம்மதி அடைந்தான். மகன் நினைத்தது போல் அமாத்யா அவ்வளவு எளிதில் ஏமாறுபவர் அல்ல. இந்த நிகழ்ச்சியை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஒரு வழியை அவர் கண்டு பிடித்தார்.

நேரே அண்ணன் வீட்டுக்குச் சென்றார். கமலாபாய் ஏற்கனவே அவரிடம் மாந்திரீகன் பேட்டியை கண் மூக்கு காதுகளோடு விவரித்திருக்கிறாள் என்று கண்டார். கமலாபாய் நிலத்தை நன்கு உழுது பண்படுத்தி விதை தூவ சௌகரியமாக வைத்திருக்கிறாள் என்று கண்டு கொண்டு வேலையைத் தொடங்கினார். 'பணிப் பெண் சாரதாவோடு மாதவன் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன்' என்று ஆரம்பித்தார். மேலும் சொல்வார் 'மாதவன் உங்களைக் கொல்ல வேண்டுமென்று சூனிய வேலைகளில் ஒரு நாளும் இறங்க மாட்டான். ஆனால் அவர்கள் பேச்சு உங்கள் மனைவிக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியதாக இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன்.'

நோயாளி துக்கத்துடன் 'ஏன் செய்யமாட்டான். என்னை மானபங்கப்படுத்தத் துணிந்தவன் என்னைக் கொல்லவும்தான் முயற்சி செய்வான். வீட்டுக்கு வரக்கூடாது என்று தடை விதித்துவிட்டதால் அந்த அகங்காரத்தில் அந்த மோஹினிப் பிசாசோடு சேர்ந்து அதையும் தான் செய்வான். நமது குடும்பத்துக்கே அவனால் பெருத்த அவமானம். என் மனம் எப்படிக் கிடந்து தவிக்கிறது என்பது உனக்குத் தெரிந்தால் நீ அவனை உடனே ஊருக்கு அனுப்பி விடுவாய். என் ஜாதகப்படி நான் இன்னும் சிலகாலம் உயிரோடு இருக்கவேண்டும் என்று நீ விரும்புவாயானால் அவனை இப்பொழுதே அனுப்பு' என்றார்.

'நானும் அதைத்தான் செய்ய வேண்டும் என்றிருக்கிறேன் அண்ணா. நாளைக்குள் அவன் போய்விடுவான். அதை உங்களிடம் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன். ஆனால் மை போட்டுப் பார்த்ததில் அந்தப் பணிப் பெண்ணும் உங்கள் மனைவிக்கு உடந்தையாக இருப்பதாகத் தெரிகிறது. அவளையும்கூட விரட்டி விடுவது நல்லது. பழைய மகாராஜா காலம் என்றால் அவளை இந்நேரம் சிறைக்குள் தள்ளிப் பூட்டியிருக்கலாம். இந்த மகாராஜாவிடம் பில்லி சூனியத்தைப் பற்றிப் பேசினால் இளக்காரமாகச் சிரிப்பார். இவருக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை' என்றார் அமாத்யா.

'அவள் வந்த அன்றே அவளை வீட்டுக்குள் சேர்க்கவேண்டாம் என்று சொன்னேன். ஆனால் அத்திம்பேர் தான் புதுப்பெண் மனம் சோரவேண்டாம் என்று சேர்த்துக் கொண்ட இப்போ இரண்டு குட்டிகளுமாச் சேர்ந்து அவர் காலத்து முந்தியே அவரை அனுப்பிவிடலாம் என்று பார்க்கறது குடும்பப் பேரையும் கெடுத்தாச்சு. அவளை இப்பொ வீட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டியது தான். எஜமானியம்மா முதலைக் கண்ணீர் வடிப்பாள். வடிக்கட்டும். அவள் பிறத்தியாருக்குக் குழிவெட்டினால் அதைத் தோற்கடிக்க எனக்குத் தெரியும் என்று நானும் காட்டுகிறேன். அத்திம் பேரே, அவள் மாத்திரம் உங்களைக் கொன்றுவிட்டாளானால் நான் அவளையும் உங்க சிதையிலேயே ஏற்றி எரித்து விடுகிறேன். இப்பொழுதே தெரிந்து கொள்ளுங்கள். அதில் உங்கள் ஆத்துமா சமாதானம் அடையும். ஆமாம், உங்கள் பிணத்தைச் சுடுகாட்டுக்குத் தூக்கிக்கொண்டு போவதற்கு முன்னாலேயே நான் அவள் துணியில் தீயை வைத்து அவள் கொளுத்திவிடுவேன்' என்று அருகிலிருந்த கமலாபாய ஆக்ரோஷமாகச் சொன்னாள்.

'என் பிணத்தைப்பற்றியும் சுடுகாட்டைப்பற்றியும் ஏன் கமலா அடிக்கடி பேசுகிறாய்? நீ அப்படிப் பேசினால் எனக்குத் திகிலாய் இருக்கிறது என்று சொன்னேனே' என்று நோயாளி பயத்திலும் எரிச்சலிலும் முனகினார். 'சாவைப்பற்றி வர்ணனை பண்ணிப் பண்ணியே நீ என்னைக் கொன்றுவிடுவாய் போலிருக்கிறது.'

கமலாபாய் பச்சாதாபத்துடன், 'ஐயோ எனக்கு மறந்து போய்விடுகிறது. உங்களைப் பிழைக்க வைக்க நான் என் உயிரை வேண்டுமானாலும் கொடுப்பேன்! நீங்கள் போய் விட்ட பிறகு இங்கே எனக்கு என்ன வைத்திருக்கிறது? ஆனால் விதி எப்படி இருக்கிறதோ? அத்திம்பேரே, நீங்க திடீர்னு இறந்துபோய்விட்டால் ஐயயோ, திரும்பவும் மறந்துட்டுதே நீங்க எனக்கு என்ன பண ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று உங்கள் தம்பியிடம் பேசுவதாகச் சொன்னீர்களே. இப்போது உங்கள் தம்பியிடம் என் எதிரேயே சொல்லிவிட்டால் பின்னால் தகராறு எதுவும் இருக்காது' என்றாள்.

சற்றுநேர அமைதிக்குப் பிறகு நோயாளி அலுப்புடன் கண்களை மூடிக்கொண்டார். பின் கண்களைத் திறந்து மெலிந்த குரலில் தம்பியை நோக்கி, 'அவள் சொல்வது சரிதான். என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? நான் அவளுக்கு இதைச் செய்ய வேண்டியது நியாயம் தான்' என்று சொல்லி கமலாபாயின் பணம் தன்னிடம் எவ்வளவு உள்ளது என்றும், அது வெளியில் எங்கெங்கே நிற்கிறது என்றும் விவரமாகச் சொன்னார்.

'என் காலத்துக்குப் பிறகு அதை வசூல் செய்து அதைப் போல் இன்னொரு மடங்கு என் பணத்திலிருந்து போட்டு என் நன்றிக்கு அடையாளமாக இரட்டிப்பாக்கி அவளிடம் கொடுத்துவிடு' என்றார். அமாத்யாவும் அப்படியே செய்வதாக தமையனாரிடம் உறுதியாகச் சொல்லிவிட்டுக் கமலாபாயிடம், 'விரும்பினால் இங்கேயே அண்ணாவின் வீட்டில் உன் காலமெல்லாம் இருக்கலாம். பணம் வசூலாகும் வரை காத்திருக்காமல் என் பணத்தை முன்கூட்டிப்போட்டு நான் முதலில் கொடுத்துவிடுகிறேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. நான் உன்னை வித்தியாசமாக நினைக்கமாட்டேன். நீ என் வீட்டில் வேண்டுமானாலும் இருந்து கொள்ளலாம்' என்றார்.

கமலாபாய் நன்றியுடன், 'இதுபோதும் எனக்கு, ஆனால் பட்டேரியின் மாற்று வேலையில் அத்திம்பேர் எப்படியும் பிழைத்துக்கொள்வார். இன்னும் வெகுகாலம் ஆனந்தமாக இருப்பார்' என்றாள்.

'எல்லாம் ஆண்டவன் கையில் இருக்கிறது. அவன் கிருபை வேண்டும்' என்று அமாத்யா பக்தியுடன் சொல்லவும், கூட்டம் கலைந்தது.

ஆண்டவனே அது மாத்திரம் வேண்டாம்!

இன்னல்கள் நிறைந்த அவள் மண வாழ்க்கையில் அவளுக்கு ஆறுதலாக இருந்த ஒரே துணையும், குழந்தைப் பிராயம் தொட்டே அவள் பழகி நேசித்து வந்த தோழியும், இந்த உலகில் அவள்

நம்பிக்கைக்குப் பாத்திரமுமாக இருந்த ஒரே ஜீவனுமான சாரதாவை அன்று வீட்டைவிட்டு அவமானப்படுத்தித் துரத்தினார்கள். அவள் திரும்பவும் அந்த வாசல் படியை மிதித்தால் அவளை வாரியலால் சாத்தி திருடி என்று சிறைச்சாலையில் அடைப்பதாகப் பயமுறுத்தியும் அனுப்பினார்கள். போகுமுன் அவள் அன்புக்குரிய எஜமானியிடம் விடை பெற்றுக்கொள்ளவும் அவளை அனுமதிக்கவில்லை. இன்னொரு பணிப்பெண் அவள் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினாள். தன் பிரிய பாயியின் கதி என்ன ஆகுமோ என்று கத்தி அழுது பலம்பிக்கொண்டே அவள் வெளியே சென்றாள்.

அன்று இரவு பட்டுக்கோட்டைக்கு உடனே கிளம்பவேண்டும் என்று மாதவனுக்கு அரசரிடம் இருந்து ஓர் அவசர உத்தரவு வந்தது. சாரதாவுக்கு நேர்ந்ததைக் கண்கூடாகக் கண்டிருந்த அந்த இளைஞன் அரசர் ஆணைக்குப் பணிந்து மறுநாள் தஞ்சையைவிட்டு வெளியேறினான். அவள் முகத்தை இன்னொருதரம் பார்த்தோம் இல்லையே என்ற ஏக்கத்துடனும், வேட்கைதணியாத காதலை நெஞ்சில் பாரமாகச் சுமந்து கொண்டும் அவன் ஊரைவிட்டு அகன்றான்.

அண்மையில் கிடைத்திருந்த அவமானத்தால் கமலாபாய் மனம் கொதித்துக்கொண்டிருந்ததால், அவள் எப்படியும் இந்தக் கொடிய திட்டத்தை நிறைவேற்றுவதில் தனக்கு முழுமையாக ஒத்துழைப்புத் தருவாள் என்று அமாத்யா நம்பினார். இருந்தும் அதை நிச்சயம் செய்வதற்காக, அண்ணாவுக்குத் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது அவள் ஒத்துழைப்பைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதுபோல் ஜாடையாக அவளிடம் குறிப்பிட்டார். அவள் வேலை திருப்திகரமாக இருந்தால் தொகையை மும்மடங்கு ஆக்கித் தருவதாகவும் சொல்லிவைத்தார்.

அவசியமில்லாததால் நோயாளிக்கு அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டாம் என்று தீர்மானம் செய்தார்கள். சோனாபாய் மூலமாகப் பெண்ணின் மனதை அறியவேண்டும் என்றும், ஆனால் பெண் மறுத்துவிட்டால் அதற்குப்பின் சோனாபாய்க்கு தேவைக்கு மேற்பட்ட எதுவுமே தெரிவிக்கக் கூடாது என்றும் முடிவு செய்தார்கள். கிளாவிருந்தாபாய் இப்பொழுது ஏறக்குறைய ஒரு அறைக்குள் அடைக்கப்பட்டிருந்தாள் என்று தான் சொல்ல வேண்டும். அவள் அங்கே பயங்கரமான எண்ணங்களால் தாக்கப்பட்டு, எதிர்காலத்தைப்பற்றி பீதி நிறைந்த கற்பனைகளால் கலங்கியும் கண்ணீர் விட்டுக்கொண்டும் இருந்தாள். தூங்கினால் கெட்டகனாக் கண்டு திகில்கொண்டாள். தான் குற்றமற்றவள் என்று சொன்ன மறுப்புகள் எல்லாம் அலட்சியம் செய்யப்பட்டன. கற்புகெட்டவள் என்று மாத்திரமல்ல, சூனியம் வைத்துக் கணவனைக் கொல்லப் பார்த்தவள் என்றும் தன்மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்று அவள் இப்பொழுது அறிந்திருந்தாள். சாரதா மூலம் அவள் கதியைக் கேள்விப்பட்ட உறவினர் சிலர் அவளைப் பார்க்க வந்தனர். அவளிடம் பேச கமலாபாய் அவர்களை அனுமதிக்கவில்லை. மேலும் சந்தேகம் வலுப்படும் என்று எண்ணியதால் கிளாவிருந்தாவும் அதை விரும்பவில்லை.

ஒரகத்தி சோனாபாய்மீது கிளாவிருந்தாவுக்கு எப்பொழுதும் மதிப்பு உண்டு. இந்த ஆறு வருட மண வாழ்க்கையில் இரண்டு வீடுகளிலும் இருந்த அத்தனைபேரிலும் அந்த ஒருத்தி மீது தான் அவளுக்குச் சற்று நல்லெண்ணம் ஏற்பட்டிருந்தது. ஆனால், தனது மூத்த மகனும் தனக்கு மிகவும் பிரியமானவனுமான மாதவனை 'மயக்கி' அவன் பரதேச சஞ்சாரத்துக்குக் காரணமாயிருந்தவள் என்று நம்பியதால் அந்த மாதரசியின் மனமும் தனக்கு விரோதமாக இப்பொழுது திரிந்துவிட்டிருந்தது என்று அவள் அறிந்திருக்கவில்லை.

சோனாபாய் அன்று காலைச் சாப்பாட்டிற்குப்பின் சாவகாசமாக கிளாவிருந்தாவின் அறைக்குள் நுழைந்து பேசுவதற்காக உட்கார்ந்தாள். தான் கணவனைக் கொல்ல முயன்ற சூனியக்காரி என்று அவளுமா நம்புகிறாள் என்று அறிய கிளாவிருந்தாவுக்கு ஆவல் மேலிடவே அவள் சோனா பாயைப் பார்த்து.

'நீங்கள் எனக்கு ஒரகத்தியாக இருந்தாலும், வயதில் நீங்கள் என் தாய்க்குச் சமானம். நானும் எப்பொழுதும் உங்களைத் தாயைப்போலவே எண்ணி வந்திருக்கிறேன். நான் செய்ததாகச் சொல்லும் இந்த அடாத செயலைப்பற்றி நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் அப்பேர்ப்பட்ட பாதகி என்று நீங்களும் நம்புகிறீர்களா சொல்லுங்கள் அக்கா?' என்றாள். சோனாபாய் பேசத்தொடங்கினாள்:

'கமலாபாய் அதைப் படிப்படியாகப் பார்த்து விவரித்ததை நானும் உடனிருந்து கேட்டேனே. உண்மையாக இருந்தால் நான் என்ன சொல்லட்டும் ஒரு மனைவி இதற்குமேல் என்ன பாதகச்செயல் செய்ய முடியும்? இப்பேர்ப்பட்ட பாதகிகளும் உலகத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், நல்ல காலம் ரொம்பப்பேர் இல்லை. அப்படிப்பட்டவர்களை எல்லாம் இரக்கம் காட்டாமல் கண்டதுண்டமாக வெட்டிச் சுண்ணாம்புக் காளவாயிலேபோட்டுப் பொசுக்கவேணும். நரகம்கூட அவர்களைத் தாங்காது. ஒரு பதிவிரதைக்குத் தெய்வம் அவள் புருஷன் தான். அவள் வேறு தெய்வத்தைக் கும்பிடவே தேவையில்லை என்றுதான் நமது சாஸ்திரமெல்லாம் சொல்லுகிறது. பெண் பிறவியே பாவமும் துன்பமும் நிறைந்தது. பதிவிரதா தர்மத்தை அனுஷ்டிக்கிறதினால் மாத்திரமே அவள் கர்மம் தொலைந்து மோட்சம் அடைய முடியும். கணவனுக்குச் சேவைசெய்து அவனுக்கு முன்னால் போய் அடுத்த உலகத்தில் அவனுக்காகக் காத்துக்கொண்டிருப்பது அவளுக்குக் கிடைக்கக்கூடிய பெரிய பாக்கியம். துரதிர்ஷ்டவசமாக அவளுக்குமுன்னால் அவன் போய்விட நேர்ந்து அவள் சதியானால் கல்யாணத்தன்றுபோல கணவனோடு கைகோர்த்துக்கொண்டே மோட்சத்துக்குப் போகக் கூடிய பாக்கியம் கிட்டும். கைம்பெண்ணுக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? எனக்கு வயசாகிவிட்டதென்றாலும், பூஜை புனஸ்காரங்களைச் செய்து வருகிறேன் என்றாலும், உன் மைத்துனர் எனக்குமுன்னால் அப்படி நேரக் கூடாது சுவாமி!– போகநேரிட்டால், என் கடமை என்ன என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது!' என்றாள்.

என்ன சொல்வது என்று தெரியாமல் கிளாவிருந்தா மௌனமாக இருந்தாள். சற்றுநேர அமைதிக்குப்பிறகு சோனாபாய் மீண்டும் சொல்வாள்: 'அடுத்த பிறந்தநாள் வந்தால் என் கணவருக்கு ஐம்பத்திரண்டு ஆகும். அவரைவிட மைத்துனர் ஓர் ஆண்டு தான் மூத்தவர். அவர்கள் தகப்பனார் அதாவது நமது மாமனார் இறக்கும்போது அறுபத்திரண்டு. ஆனால், எப்பொழுதுமே உடல் நலமில்லாமல் இருந்துவிட்டதால் இப்பொழுது ரொம்பவும் தளர்ந்துவிட்டார். இரண்டு இரும்பாணியை உடலுக்குள்ளே செலுத்தியபிறகு அவர் இன்னும் உயிரோடு இருப்பதே

அதிகம் என்று நேற்று அந்த மாந்தரீகன் சொன்னான்.'

கிளாவிருந்தா ஆவல்மிகுதியால் குறுக்கிட்டு, 'எங்கேயோ ஒருவன் ஒரு மரப்பாச்சியில் துளைத்த ஆணி எப்படி இங்கே வீட்டுக்குள் படுத்திருக்கும் உங்கள் மைத்துனர் வயிற்றுக்குள் இறங்கி அவர் ஆரோக்கியத்தைப் பாதிக்கமுடியும்?' என்று கேட்டாள். சோனாபாய் பொறுமை இழந்தவளாய், 'எனக்கு எப்படித் தெரியும்? சூனியக்காரனைத்தான் கேட்கவேணும். அது இருக்கட்டும். மைத்துனர் திடீரெனப் போய்விட்டால் நீ என்ன செய்யலாம் என்றிருக்கிறாய்?' என்று கேட்டாள். கிளாவிருந்தா மெலிந்த குரலில் 'நான் வயதில் குறைந்தவள். பயமாக இருக்கிறது. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. பாபாஜிகூட அடிக்கடி. அப்படித்தான் சொல்லுவார்' என்றாள்.

'என் கணவரும் அதைத்தான் சொன்னார். அதனால் தான் உனக்கு ஆலோசனை சொல்லிவர என்னை அனுப்பினார்.' ஒரு புண்ணிய கைங்கரியம் செய்ய வந்திருக்கும் நினைப்பால் சோனாபாய் பெருமிதத்தோடு தொடர்ந்து சொன்னாள்: 'இளமையோ, மூப்போ கணவன் இறந்தபிறகு ஒரு பிராமணப் பெண்ணுக்கு இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை. உன் பேரிலோ கணவனுக்கு விரோதமாகப் பெரிய பெரிய பாதக மெல்லாம் செய்துவிட்டதாகப் பழிசுமத்துகிறார்கள். நிஜமோ பொய்யோ, கடவுளுக்குத்தான் தெரியும். சாகக் கிடக்கும் போதுகூட அவருக்குப் பணிவிடைசெய்ய உனக்குக் கொடுத்து வைக்கவில்லை. நீ உண்மையிலேயே அந்தப் பாவம் ஒன்றும் செய்யவில்லையானால் அதை ருசுப்படுத்துவதற்கும் அல்லது செய்திருந்தாலும் பிராயச்சித்தம் செய்வதற்கும், அடுத்த பிறவியிலாவது நல்லகதி கிடைப்பதற்கும் அவரோடு சிதையில் ஏறி சதியாகிவிட்டால் என்ன? அதையும்விட உத்தமமான காரியம் வேறு எது இருக்கிறது சொல்?'

கிளாவிருந்தாவின் தேகாந்தமும் நடுங்கிற்று. முகத்தில் பீதி படர்ந்தது. மறைந்திருந்து உக்கிரமாகப் பாயும் புலியைப் பார்த்துவிட்டு நடுங்கும் மானைப்போல் பரிதாபமாக இருந்தது அவள் தோற்றம். சில வினாடிகள் அவள் நெஞ்சு அடிக்கவே இல்லை. அப்படியே அடிக்காமலே நின்றுவிடுமோ என்றுகூட நினைத்தாள். பின் பயமிகுதியால் அவள் கண்களிலிருந்து தாரையாக நீர் வடியலாயிற்று. இரண்டு கைகளையும் நீட்டி ஓரகத்தியின் தோளிலே சாய்ந்து அழுகையோடு அழுகையாக பேசத்தொடங்கினாள்:

'ஐயோ அக்கா, அது மாத்திரம் வேண்டாம். என் ஆண்டவனே அது மாத்திரம் வேண்டாம். நான் ஒரு பாவமும் செய்யவில்லை, என் கணவருக்கு, இல்லை யாருக்குமே ஒரு தீங்கும் செய்ததில்லை. நான் சிறு வயதினள். நெருப்பால் மரணம் என்பதை நினைக்கக்கூட முடியவில்லை. நெருப்புக்குப் பயந்ததால் நான் சமையல்கூட சரிவரக் கற்றுக்கொண்டதில்லை. சின்ன வயதில் ஒரு சமயம் என் கையில் கொதிக்கும் எண்ணெய் தெறித்துவிட்டது. அதிலிருந்து அடுப்பின் பக்கமே போவதில்லை. தீபாவளிக்குப் பட்டாசுகூட பாபாஜியிடம் கேட்டதில்லை. விஷம் வேண்டுமானாலும் குடித்துவிடலாம். இதை நினைத்தால்கூட பயமாக இருக்கிறதே.'

என்ன பேசுவது என்று அறியாமல் சோனாபாய் அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

கிளாவிருந்தா மீண்டும் 'நான் பெரும் அபாக்கியவதி. பிறந்த அன்றே பெற்றோர் இருவரையும் இழந்துவிட்டேன். ஐந்து வயதுவரை அந்நியர்களால் பராமரிக்கப்பட்டேன். பின் சில ஆண்டுகள் தான் பாபாஜியோடு சந்தோஷமாக இருந்தேன். ஐயோ எனக்கு ஏன் தான் கல்யாணம் ஆயிற்றோ? இந்தக் குரூரமான விதியை அனுபவிக்கும்படி என் பாபாஜி என்னை விட்டு விட்டுப் போய்விட்டாரே! அன்று அந்த ஆங்கிலேயர் அவ்வளவு தீரமும் பரிவும் காட்டி என்னைக் காப்பாற்றியிருக்காவிட்டால் நானும் பாம்புக் கடியால் இறந்திருப்பேன்.'

'அக்கா உங்களுக்குத் தெரியும். இந்த வீட்டில் நான் வந்தது முதல் ஒருநாளாவது சந்தோஷமாக இருந்திருக்கிறேனோ? எந்நாளும் துன்பம் தான். இந்த இரண்டு வீடுகளிலுமாக நீங்கள் ஒருவர் தான் என்னிடம் இரக்கம்கொண்டவர் என்று நினைத்திருந்தேன். உங்கள் தங்கையைப்போலச் சொல்லுகிறேன், தாயிடம் கேட்பதுபோலக் கேட்கிறேன்; நல்ல நிலையில் இருக்கும் பெண்மணியிடம் ஒரு அடலை முறையிடுவது போல முறையிடுகிறேன். நீங்கள், ரமணிபாய் மேலும் மற்றக் குழந்தைகள் மீதும் கொண்டுள்ள அன்பின் பேரில் கெஞ்சிக் கேட்கிறேன். இந்தக் கதியிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். என்னால் அதைத் தாங்கவேமுடியாது. சிதையைப் பார்த்ததுமே என் உயிர்போய்விடும். எனக்குப் பதினெட்டு வயதுதான் ஆகிறது. இந்தப் பிறவியில் எனக்கு இனிமேல் தாம்பத்திய வாழ்க்கையும் குழந்தைப் பாக்கியமும் இல்லை என்று ஆகிவிட்டது. மீதம் இருக்கும் நாட்களிலாவது புண்ணிய காரியங்கள் செய்து என் பாவங்களைத் தொலைத்துக் கொள்வேன். பாபாஜியின் கடைசி விருப்பங்களை நிறைவேற்றாவிட்டால் என் நெஞ்சு வேகாது. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள். பாபாஜியின் கடைசி ஆசையை நிறைவேற்ற உதவி செய்யுங்கள். அபலையும் அனாதையுமான பெண்ணுக்குச் செய்த உதவிக்காக கடவுள் உங்களிடம் கருணைகாட்டுவார்.'

'அக்கா, நான் உங்கள் மகன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டு இங்கேயே இருப்பேன் என்று நினைக்காதீர்கள். தாம்பத்திய சுகம் இன்னதென்று எனக்குத் தெரியாவிட்டாலும், கணவனின் அன்பை இன்னொருத்தி பறித்துக் கொண்டால், ஏற்படும் கசப்பை நான் அனுபவத்தால் உணர்ந்தவள். இன்னொரு இளம் மனைவியை மனம்நோகச் செய்ய என் மனம் ஒருநாளும் சம்மதிக்காது. நான் எங்காவது தொலை தூரம்போய் பாபாஜியின் நினைவுக்கடனை நிறைவேற்று வதிலேயே என் மிச்ச வாழ்க்கையையும் கழித்துவிடுவேன். என்னால் சதி ஆகமுடியாது, முடியவே முடியாது. வேண்டாம் நினைத்தால் கூட நடுக்கமாக இருக்கிறதே' என்று திகிலினால் நடுங்கிக்கொண்டே சொன்னாள். பேசி முடித்தபின்னும் அழுகை நிற்கவில்லை. ஏங்கி ஏங்கி அழுதவண்ணம் இருந்தாள்.

சோனாபாய் மனம் இளகாதவளாக 'என்னமோ அம்மா, உன் போக்கு எனக்குப் புரியவில்லை' என்று சொல்லிக் கொண்டே கிளாவிருந்தாவின் தழுவலிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள். அதனால் கிளாவிருந்தா அழுது கொண்டே தரையில் விழுந்தாள். 'உன் இஷ்டப்படியே நடந்துகொள். மனமில்லாதவளை எப்படிச் சதியாக்கப் பலவந்தப்படுத்தமுடியும்?'

உண்மையிலேயே ஒரு பிராமணப் பெண்ணின் மனப்போக்கு இப்படி இருந்தது சோனாபாய்க்குப் புரியாமல் இருந்தது. அதனால் கிளாவிருந்தாவின் மேல் அவளுக்கு அனுதாபம் உண்டாகவில்லை.

**தொடரும் ..**

Salem

## சேலம் மிஷன் சந்தித்த

# சோதனைகளும், சாதித்த சாதனைகளும்

● ஜே பர்னபாஸ்

சேலம் வரலாற்றுச் சங்கம்

**சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் (1833-1841)**

சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் (Rev.George Walton, L.M.S.,-period of service-1833-1841) இந்தியாவில் பிறந்த ஆங்கிலோ - இந்தியர். இன்றைய கர்நாடக மாநிலம் பெல்லாரி (Bellary) யில் கல்வி கற்று அங்கேயே உதவி மிஷனெரியாக 1824 ஆம் ஆண்டிலிருந்து ஊழியம் செய்து வந்தார். அவர் 1832 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் பெங்களூருவில் அருட்பொழிவு பெற்றார். சேலம் மிஷன் ஸ்தாபகரும், நிர்வாகியுமாக, இருந்த சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயர் 28-10-1831ல் சேலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்த பிறகு, சேலம் மிஷன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி லண்டன் மிஷன் சங்கத்தாரால் சேலம் அனுப்பப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டவர் தான் சங்கை வால்டன் ஐயர் ஆவார். சேலம் மிஷன் இவரது காலத்தில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்றே சொல்லலாம். ஆனாலும் அவரது காலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சம், பசி, பட்டினிச் சாவுகள் வளர்ந்து வந்த சேலம் மிஷனை குலுக்கிப் போட்டுவிட்டது. இந்த அசாதாரண சூழ்நிலையை சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் சிறப்பாக கையாண்டு சேலம் மிஷனை மீட்டெடுத்து, அதனை சிறப்பான வளர்ச்சிப் பாதையில் கொண்டுபோய் நிறுத்தினார்.

**1833 ஆண்டின் கொடிய பஞ்சம்:**

சேலத்தில் வால்டன் ஐயர் பொறுப்பேற்ற உடனே அவர் சந்தித்த மிகப்பெரிய சவால் சேலத்தில் ஏற்பட்ட இந்த கொடிய பஞ்சம்தான். சேலம் மிஷன் வளாகத்தில் ஐயர் முன்னதாகவே துவக்கியிருந்த **'தரும இல்லம்'** (Alms house) இந்த சூழ்நிலைகளில் மிகப் பயனுள்ள ஒரு அமைப்பாக திகழ்ந்தது. இந்த தரும இல்லத்தை ஆதரித்து வந்த ஐரோப்பியர்களின் உதவிகளால் இந்த கொடிய பஞ்சகாலத்தில் சேலம் மிஷன் வளாகத்தில் தினமும் நாள் ஒன்றில் 500 பேர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தார். இந்த கொடிய பஞ்சத்தில் சேலத்தில் அநேகம் பேர் பசிப்பட்டினியால் வாடி மாண்டு போனார்கள். மீண்டு வந்தவர்களும் நிராதரவாக ஆதரவற்றோராக சேலம் மிஷன் ஆதரவை நம்பி வந்தடைந்திருந்தார்கள். இது ஒரு மிகப்பெரிய சவாலாக சமாளிக்க முடியாத படியான அளவில் வளர்ந்து போனது. பஞ்சத்தில் அடிபட்டவர்கள் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் சேலம் மிஷனில் தஞ்சமடைந்தனர். இவர்களில் ஆண்களைவிட, ஆதரவற்ற பெண்கள் அதிகம், இந்த ஆதரவற்ற பெண்களைவிட பிள்ளைகள் அதிகம். இப்படியாக சேலம் மிஷன் அளித்த நிவாரணங்கள் அன்று சிறப்பான நிலையில் பாராட்டப்பட்டது. அநேகர் பஞ்சம், பசி, பட்டினியிலிருந்து மீண்டு சேலம் மிஷன் திருச்சபையால் மீட்பைக் கண்டடைந்தார்கள்.

**முதல் கிறிஸ்தவ கிராமம் :**

அப்பொழுது ரோமன் கத்தோலிக்க நிர்வாகிகள் புது கிறிஸ்தவர்களை கூட்டிச்சேர்த்து கிறிஸ்தவ கிராமங்களை உருவாக்கி வந்தார்கள். அதேபோல சீர்திருத்த கிறிஸ்தவர்களும் தங்களுடன் சேர்ந்துகொண்ட புது கிறிஸ்தவர்களைக் கொண்டு தென் தமிழகத்தில் கிறிஸ்தவ கிராமங்களை உருவாக்கிக் கொண்டு வந்திருந்தனர். இந்த மாதிரிகளைப் பின்பற்றியே சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயரும் சேலம் மிஷன் வளாகத்தில் பஞ்ச காலம் முடிந்த கையோடு 1834ஆம் ஆண்டு ஒரு கிறிஸ்தவ கிராமத்தை உருவாக்கினார். சங்கை வால்டன் ஐயர் இந்த கிராமத்தில் குடியிருப்போருக்கு ஒரு முக்கியமான கட்டளையையும் கொடுத்திருந்தார். அதாவது அவர்கள் தங்கள் பிழைப்பிற்காக உழைக்க வேண்டும் என்றும், கிறிஸ்தவ குடியிருப்பின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும், ஞாயிறு ஆலய வழிபாட்டில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்றும், தங்கள் பிள்ளைகளை தவறாமல் மிஷன் வளாகத்தில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டும் என்றும் வலியுறுத்துவதே அந்த கட்டளை ஆகும்.

**கிறிஸ்டியன் பேட்டை** (Christianpet):

இந்த குடியிருப்பே பிற்காலத்தில் சேலம் மிஷன் வளாகத்திலிருந்து சேலம் கோட்டைப் பகுதிக்கு (தற்பொழுது சேலம் கோட்டை தென்புறம் - குண்டுபோடும் தெரு அருகே இந்த கிறிஸ்தவ குடியிருப்பு உள்ளது) மாற்றப்பட்டு மாற்று ஏற்பாடாக சேலம் மாவட்ட நிர்வாகத்தாலும், சேலம் மிஷன் நிர்வாகத்தாலும் 1863ல் மீட்டுருவாக்கப்பட்டதே தற்போதைய கிறிஸ்டியன்பேட்டை (Christianpet)ஆகும்.

**கல்வி வளர்ச்சி**:


சங்கை வால்டன் ஐயர் காலத்தில் குறிப்பிட்டு பாராட்டத்தக்க விஷயம் கல்விப் பணியின் சிறப்பான வளர்ச்சியே ஆகும். திருச்சபையில் சேர்ந்த பெரியவர்கள் மற்றும் சிறியவர்களும் கல்வி கற்க வேண்டும் என்ற கட்டளையை ஐயர் கொடுத்திருந்தார். சேலம் மிஷன் வளாகத்தில் பெரியவர்களுக்கான Adult School ஒன்றும் ஆண், பெண், இருபாலருக்குமானது. ஐயரால் துவக்கப்பட்டிருந்தது.

**பெண்கல்வி முயற்சி :**

மேலும், சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயரின் மனைவி திருமதி. எலிசா ஸ்டெப்பி அம்மையாரால் சேலத்தில் முதன்முதலாகத் துவக்கம் கண்ட பெண்பிள்ளைகளுக்கான கைகளில் உள்ள

வேதாகமங்களை பிரசங்க நேரத்தில் எடுத்து பிரசங்கியார் குறிப்பிடும் வேத வசனங்களை படித்துப்பார்க்கும் நிலை அதை நான் பார்க்கவேண்டும் அது எனக்கு மகிழ்ச்சியைத் தரும்' என்று சங்கை வால்டன் ஐயர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

சேலம் மிஷன் சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் காலத்தில் நற்செய்தி பிரபல்யத்திலும், கல்வி வளர்ச்சியிலும், பெண்கல்வியின் தொடர்ச்சியிலும், பெரியவர்களுக்கான வயது வந்தோருக்கான Adult School பள்ளிகளுக்கான கரிசனையிலும், அப்பொழுது சேலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்திலிருந்து தம்மிடம் தஞ்சமடைந்தவர்களைக் காப்பாற்றிய தோடல்லாமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐரோப்பியர்களிடம் உதவி பெற்று செய்த மகத்தான நிவாரண தரும சேவைகளை வரலாற்றின் ஏடுகள் பறைசாற்றும். அப்பொழுது சேலத்தில் உதவி கலெக்டராக இருந்த திரு கேத்காரட் ( Mr. Cathcart) என்பாரிடம் பரிந்து பேசி தன்னிடம் தஞ்சமடைந்த அனைவரையும், குறிப்பாக வளர்ந்து வந்த சேலம் திருச்சபையையும் காப்பாற்றினார்.



(கடந்த 14-10-2017 அன்று சேலம் வந்திருந்த ஜெர்மானியர் திரு.டேனியல் ஸ்சாட் (Mr.Daniel Schad from Halle, Germany) அவர்கள் சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் கல்லறை கல்வெட்டை ஆர்வமுடன் பார்க்கும் காட்சி.)

# கிறிஸ்துமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்...


இரண்டாண்டுகளாகப் பாளையங்கோட்டையில் இருந்து அவ்வூரிலும், திருநெல்வேலி நகரிலும், சுற்றிலும் மேற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும் சுமார் இருபதுகல் தொலைவுக்குள்ளிருந்த கிராமங்களிலும் கிறிஸ்து மார்க்கத்தைத் தினந்தோறும் தாங்களே நேரில் சென்றும் பிரசங்கிமார்களை யனுப்பியும் கூறியறிவித்தும், பாளையங்கோட்டையைச் சேர்ந்த நான்கே நான்கு ஆத்துமாக்களைத் தவிர, வேறு ஒருவரையும் கிறிஸ்தவ விசுவாசத்துக்குள் கொண்டுவரத் தங்களுக்கியலாது போனதைக் குறித்து வருந்திக் கொண்டிருந்த ரேனியஸ், ஷ்மிட் என்ற மிஷனெரிமாரிருவரும், கிழக்கே திருப்புளியங்குடி யென்ற கிராமத்தைச் சேர்ந்த 65 வயதான நம்பி என்பாரும், அவரது மக்களாகியபலவேசம்(31. சின்னப்பலவேசம்(28), சுப்பிரமணியன் (26) என்னும் மூவரும், அவர்களின் அண்டை வீட்டுக்காரனான லட்சுமணன் (32) என்பவரும், பாளையங்கோட்டை மிஷனெரி பங்களாவிற்குச் சென்று, அம்மிஷனெரிமாரைக் கண்டு, "ஐயா, எங்களைக் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்," என்று கேட்டுக்கொண்ட நாளிலடைந்த (1822 மே) மகிழ்ச்சிக்கு எல்லையுண்டோ? உள்ளம் நன்றியால் துள்ள, அவர்கள் கர்த்தருக்குத் துதி செலுத்தி அம்மக்களை ஆயத்தக்காரராகச் சேர்த்து, உபதேசங் கொடுத்துச் சில மாதங்களுக்குப் பின், 1822 ஆகஸ்டு 17-ம் நாள் அவர்களுக்குத் திருமுழுக்கருளித் திருச்சபையில் சேர்த்தனர். நம்பிக்கு யாக்கோபு பாக்கியம் என்றும், அவருடைய மக்களுக்கு முறையே பவுல், ஸ்தேவான், தீத்து என்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டன. சில மாதங்களுக்குப்பின், ஸ்தேவான் முறைப்படி பயிற்சி பெற்று, அச்சபையின் முதல் உபதேசியாரானார். நாளாவட்டத்தில் ஊரிலுள்ள மற்றவர்களும் சேரவே, சபை விரைவில் வளர்ந்தது.


தொடக்கத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிக உற்சாகமாயிருந்த சபை ஆண்டுகள் செல்லச்செல்ல அனல் குன்ற ஆரம்பித்தது. பத்தாண்டுகளுக்குள் அது மிகவும் மோசமான நிலைமைக்குள்ளாயிற்று. மிஷனெரிமார் அது பற்றி மிகவும் வருந்தினார்கள்.

1832-ம் ஆண்டுத் தொடக்கத்தில், அக்காலம் பாளையங்கோட்டையில் உதவி மிஷனெரியாயிருந்து வந்த P. P. ஷாஃப்டர் ஐயர் (Rev. P. P. Schaffter) ஒரு ஞாயிற்றுக்கிழமை அவ்வூருக்குச் சென்று ஆராதனை நடத்தினார். சுமார் ஆறு ஆண்கள் மட்டுமே அன்று ஆராதனைக்கு வந்திருந்தார்கள். ஐயர் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது ஆறு பேரும் உறங்கிவிட்டனர்!. ஐயர் அதைக் கவனித்து, உடனே பிரசங்கத்தை நிறுத்திவிட்டு, அவர்களை உசாவி எழுப்பி, அவர்களுடைய நிலபுலன்களையும் மகசூல்களையும் பற்றி விசாரிக்கவாரம்பித்தார். அவ்வளவுதான்!. உடனே தூக்கமெல்லாம் பறந்துவிட்டது!. ஒவ்வொருவரும் மிகுந்த உற்சாகங்கொண்டு, அவருடைய கேள்விகளுக்கு நான், நீ என்று முந்திக்கொண்டு பதில் சொல்லவாரம்பித்தார்கள். ஷாஃப்டர் மிகவும் விசனித்து அவர்களுடைய உலக ஆசையைக் கண்டித்து, புத்திமதிகூறித் திரும்பினார் என்று கூறத் தேவையில்லை.

# கனம் ஷராக் ஐயர்

● முனைவர்.பேரா.குட்டி ஜாஸ்கர்,
போப் கல்லூரி, சாயர்புரம்


Rev.J.A.Sharrock


Right. Rev. Frederick Gel


Right Rev E.R Johnson

Rev.J.A.ஷராக் ஐயர் (1853-1932) அவர்கள் Rev. ஜேம்ஸ் ஷாராக்கின் மூன்று மகன்களில் இளையவர். Rev.J.A ஷராக் ஐயர் அவர்கள் 17.11.1853 ஆம் ஆண்டு பிறந்தார். கேம்பிரிட்ஜ், ஜீசஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, தென் இந்தியாவில் மிஷனெரி ஊழியம் செய்ய தீர்மானித்து, 1887ஆம் வருஷத்தில் பி.ஏ. பரிட்சையில் தேர்ச்சி பெற்றதும், தமது தீர்மானத்தின் படியே இந்தியாவிற்கு வந்து மகாகனம் கால்டுவெல் அத்தியட்சருடன் சேர்ந்து பிரசங்க ஊழியம் செய்தார். 1879 ஆம் ஆண்டு அத்தியட்சர் அவர்களால் உதவி குரு பட்டம் பெற்றார். 1879 - 1880 ஆண்டில் இடையன்குடியில் பணி செய்தார். ஆயினும் சுகவீனம் காரணமாக தாய் நாடு திரும்ப நேரிட்டது. 1880 ஆம் வருடம் York பட்டணத்தில் குரு பட்டம் பெற்றார். மீண்டும் 1861 ஆம் வருடம் திருநெல்வேலிக்கு மிஷனெரியாக வந்து இருபத்தெட்டு வருட காலமாய் தென் இந்தியாவில் உழைத்தார். முதலாவதாக ஐயரவர்கள் சாயர்புரத்தில் பணி செய்தார்கள்.

1882 க்கு மேல், ஷாராக் ஐயர் சில முக்கியமான பணிகளை நிறைவேற்றினார். முதலாவது ஆண்கள் போர்டிங் பள்ளியொன்றும் பெண்கள் போர்டிங் பள்ளி ஒன்றும் நிறுவினார். 1883 இவ்விரண்டும் இன்று வரை மெமோரியல் பரி மேரி என்ற பெயர்களின் புகழுடன் விளங்குகின்றது. தூத்துக்குடியிலும் அதே சமயத்தில் (1883) அவர் ஏற்படுத்திய பெண்கள் போர்டிங் ஸ்கூலே 1887 முதல் விக்டோரியா ராணியாரின் பெயரில் கீர்த்தியுடன் நிலைத்திருக்கிறது.

சாயர்புரம் இன்னமும் ஒரு குக்கிராமமாகவேயிருந்தது. இன்னமும் 22 வீடுகள் தான்! இந்நிலையை மாற்ற ஷாரக் ஐயர் புதுக் குடியேற்ற மொன்றைத் தோற்றுவித்து ஷாராக் தெரு என்ற ஒரு தெருவையும் (மே 1885) பங்களாவிற்கு மேற்கில், லூக்காபுரம் என்னும் ஒரு குடியேற்றத்தையும் உண்டாக்கிப் பிரதிஷ்டை செய்தார். (அக்டோபர் 18 1886)

1881இல் வேதமுத்து ஐயர் மாற்றப்பட்டபின் பி.சாலமோன் ஐயர் அவர் இடத்தில் நியமிக்கப்பட்டார். இவர் சாயர்புரத்தின் நான்காவது இந்திய குரு 1881 முதல் 1893 வரை சபை குருவாகவும், 1893 முதல் 1896 வரை மேற்பார்வை மிஷனெரியாகவும் (Superintending Missionary) 15 ஆண்டுகள் உண்மையான சேவையாற்றினார்.

மிகவும் கண்டிப்புக்காரரான இவர் செய்த முதல் வேலை, ஆலய ஆராதனைகளுக்கு ஒழுங்காகச் செல்லாதவர்களைத் தன் சேகரமெங்கும் தேடிக் கண்டுபிடித்துப் பட்டியல் தயாரித்தார். அதில் 680 பெயர்களிருந்தன அனைத்து பெயர்களையும் சபை ரிஜிஸ்தரிலிருந்து நீக்கி, திருச்சபையைச் சுத்திகரித்தார்.

அதன் பின் ஷாரக்கும், சாலமோனும் தேவாலயக் கட்டுமானத்தை முடிப்பதில் ஆர்வம் கொண்டார்கள். ஷாரக் ஐயர் ஆலயக் கட்டுமானத்தைப் பூர்த்தி செய்வதில் ஒத்தாசை கேட்டு ஒரு மனுவை (Appeal) எழுதி சென்னை எஃப் ஜெல், தூத்துக்குடி ஆர். கார்டுவேல் அத்தியட்சர்களுடைய சிபாரிசுடன் தன் நண்பர்கள் மிஷனெரிகள், அத்தியட்சர்கள், குருமார் முதலியோருக்கு அனுப்பினார்.

**அதில் காணப்பட்ட சில குறிப்புரைகள்**

'இதில் அஸ்திவாரம் ஹக்ஸ்டபிள் ஐயரால் 1854 அக்டோபர் 19ஆம் தேதி அமைக்கப்பட்டது. பணமில்லாத படியால் 1864 வரை வேலை

தடைப்பட்டது. பின் 1864 இல் தொடங்கி, சுவர்கள், பக்கவாட்டு அறைகள், வளைவுகள் கட்டப்பட்டன. ஆனாலும் பாக்கியான வேலை அதிகம். இப்போது (1884) அதை பார்த்தால், பாழடைந்த பழங்கால மண்டபம் போலிருக்கிறது. மூவாயிரத்திற்கு அதிகமான, இச்சேகரக் கிறிஸ்தவர்கள் ஆராதிக்க வேண்டிய தேவாலயம் இப்படி கிடக்கிறது! தேவையானது ரூ.13,000/- பதிமூன்றாயிரந்தான் அதாவது ஆயிரம் பவுன். சபையாரின் தினசரி வருமானம் நாலு அணாத்தான். இவ்வற்பத்தொகையிலிருந்து திருச்சபைப் பணிக்கு எத்தனையோ விதங்களில் அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி அவர்கள் கொடுத்தது (இவ்வருஷம் மட்டுமே) ரூ.1245/ஒவ்வொரு வருஷமும் இத்தொகையை அவர்கள் கொடுத்தாக வேண்டும். அண்மையில் தான் அவர்கள் கிராம ஆலயம் ஒன்றை பழுது பார்க்க ரூ.3000/ கொடுத்திருக்கிறார்கள். திரியேக தேவனுடைய மகிமைக்காக இவ்வாலயத்தை கட்டி முடிக்க மக்கள் ஆவலாயும் ஆர்வமாயுமிருக்கிறார்கள். இதுபோன்ற எத்தனையோ முறையீடுகள் வரும். ஆனாலும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுகின்றேன்'.

கர்த்தர் ஆசீர்வதித்தார். பணம் பலவிடங்களில் இருந்தும் வந்து குவிந்தது கட்டட வேலை திரும்பவும் ஆரம்பமாகித் துரிதமாய் நடந்தேறியது.

1887 நவம்பர் 11 கல்கத்தா தாயாதீன அத்தியட்சர் பெருமகன் (The Metropolitan Bishop of Calcutta) மாகாணம் இ.ஆர் ஜான்சன் அத்தியட்சர் சாயர்புரம் வந்தார். அன்று காலை பிரதிஷ்டை ஆராதனை நடந்தது. சி.எம்.எஸ் எஸ்.பி.ஜி மிஷெனரிமார், குருமார் ஐரோப்பிய அரசலுவலர், மேலும் பல பிரமுகர், சபை ஊழியரான, ஆண்கள், பெண்கள், சபை மக்கள் சுமார் ஆயிரம் பேர் ஆராதனையில் கலந்து கொண்டனர். "திரியேக தேவனாகிய பிதா, குமாரன் பரிசுத்தாவியாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள்களுக்கு மகிமையாக" பரிசுத்த திருத்துவ ஆலயம் என்ற திருநாமத்துடன், அத்தியட்சர் இவ்வாலயத்தை பிரதிஷ்டை செய்து, பரிசுத்த நற்கருணை ஆராதனை நடத்தினார். அதில் 753 பேர் பங்கு பெற்றனர்.


ஷராக் ஐயரவர்கள் தூத்துக்குடி கல்லூரியில் முதல்வராய் பணி செய்யும் போது, கீர்த்தனை புத்தகம் ஒன்றை அச்சிட்டும், தமிழ் கீர்த்தனைகளுக்கு இராக புத்தகம் இயற்றியும், தமிழ் ஞான கீதம் புத்தகம் ஒன்று பதிப்பித்தும் வெளியிட்டார்கள்.


சாயர்புரத்திலிருந்து 1894 - 1895 ஷாரக் ஐயர் கூடலூரில் பணி செய்தார். பின் 1895 - 1899 திருச்சியில் பணி செய்தார். திருச்சியில் பணி செய்யும் பொழுது 'தென்னிந்திய மிஷன்கள்' 'பூர்வீக தற்கால இந்து மதம்' என்னும் புத்தகங்களை எழுதினார். 1899 - 1900 தாய்நாடு சென்றார். பின்பு 1900 -1909 மீண்டும் திருச்சியில் பணி செய்தார். அப்போது பிஷப் ஹீபர் கல்லூரியில் 1907 - 1909 வரை முதல்வராக இருந்தார். 1909ல் S.P.G சங்கத்தில் பணி நிறைவு பெற்றார். 1911 - 1914 Westminister St.Boniface college லும் 1914 -1932 வரை Holy Trimity Worcester லும் பணி செய்தார். அப்போது 17.02.1932 ஆம் ஆண்டு மறுமைக்குட்பட்டார்.

திரியேக தேவனுக்கே மகிமை

✦ ✦ ✦

பாமாலை -275 (காற்று திசை நான்கிலும் ) ராகம் -ஷாரக்





LYRIC TUNE BOOK.

A COLLECTION OF AIRS SUNG TO THE TAMIL SACRED LYRICS OF SOUTH INDIA.

EDITED AND HARMONIZED BY


THE REV. J. A. SHARROCK, B. A.,


*Principal of Caldwell College, Tuticorin.*

MADRAS:

S. P. C. K. PRESS, CHURCH ROAD, VEPERY.

1888.





# அரண்மனைக்குள்ளும் சுவிசேஷம் புகும்

பேராசிரியர் கிறிஸ்துதாஸ் –DAC

நூறாண்டுகளுக்கு முன்னிருந்த எட்டையாபுரம் ஜமீந்தார் ஒரு தீவிர சிவபக்தன். ஆகையினால், தன் அதிகாரத்துக்குட்பட்ட எல்லையெங்கும் கிறிஸ்து சமயம் வளர்ச்சியுறாமல் தடுப்பதற்குத் தன்னாலானதெல்லாம் செய்துவந்தா ரென்பது வியப்புறுவதற்கான செய்தியன்று. புதுச்சபைகளில் ஆலயம் கட்ட அனுமதி மறுத்தார்; கல்லறைத் தோட்டத்துக்கு நிலம் தர மறுத்தார்; கிறிஸ்தவப் பிரசங்கிகளின் பிரசங்கத்தைக் கேட்க மக்களுக்கு உத்திரவு கொடுக்க மறுத்தார்; கிறிஸ்தவ வேத புத்தகத்தையோ சுவிசேஷங்களையோ, துண்டுத்தாள் பிரதிகளையோ தன்னைச் சேர்ந்தவர்கள் எவரும் வாசிக்கக் கூடாதென்றுங் கூட தடுத்தார். புதியம்புத்தூர், நாகலாபுரம் வட்டங்களில் பல பகுதிகள் அவருடைய ஜமீனுக்குட்பட்டிருந்ததால், கிறிஸ்து மார்க்கத்துக்கு அதிக இடையூறுகளும் இடைஞ்சல்களுமிருந்தன. இந்நிலை மாறவும், 'இராயனுடைய அரண்மனை'க்குள்ளும் சுவிசேஷம் புகும் காலம் சீக்கிரம் வரவேண்டுமென்றும் ஊக்கமாக ஜெபித்தவர்களில் மேலச்செய்த்தலை குருவான அருளப்பன் தாவீதும் ஒருவர்.

அவர் வெகு நாளாக இந்த ஜெபத்தைச் செய்து வந்தார். மேலச் செய்த்தலையில் பொன்னப்பபிள்ளை யென்றொருவரிருந்தார். அவர் எட்டையாபுரம் ஜமீன் கணக்கப் பிள்ளைகளிலொருவர். ஆகையினால் அப்பகுதிகளில் அவருக்கு மிகுந்த செல்வாக்கும் கண்யமுமிருந்தன. ஜமீனிலும் அவருக்கு அதிகாரிகளுடைய தயவு உண்டு. குறிப்பாக தலைமைக் கணக்கரான சர்தார் முத்துசாமி பிள்ளை பொன்னப்பபிள்ளையைத் தன் உடன் பிறவி போல மதித்து நடத்தி வந்தார்.

பொன்னப்பபிள்ளை கொஞ்சம் கல்வியறிவு படைத்தவர். ஆகையினால் படித்தவர்களின் சகவாசத்தை அவர் வெகுவாய் விரும்பினார், அதைத் தேடியும் அலைந்தார்.

1857-58 ல் சாயர்புரம் அருளப்பன் தாவீது ஐயர் மேலச் செய்த்தலைக்கு மாற்றுதலாகி அவ்வூருக்கு வந்ததிலிருந்து, பொன்னப்பபிள்ளைக்கு நன்கு படித்த ஒரு நல்ல நண்பன் கிடைத்துவிட்டார். இருவரும் நெடுநேரம் உட்கார்ந்து உரையாடுவர்; மாலையில் உலாவச் செல்வர்; ஒருவரோடொருவர் உள்ளங்கலந்து பேசி மகிழ்வர். உயர் சாதி இந்து மக்களுக்கு இப்பெரியாரிருவரின் நட்பு வியப்பையே தந்தது. அதன் அருமையையும் ஆழத்தையும் அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. நாளாவட்டத்தில், நண்பர்களின் உரையாடல் மார்க்க சம்பந்தமாக மாறிப், பின் இரட்சகரைப் பற்றியதாகவேயிருந்து வந்தது. கொஞ்சங் கொஞ்சமாகப், பொன்னப்பபிள்ளை கிறிஸ்து நாதரின் பிள்ளையானார். இயேசு ராஜாவைத் தன் ராஜாவாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு, உள்ளன்புடன் அவரை நேசித்தார். ஆனால், 'அந்தரங்க விசுவாசி'யாகவேயிருந்தார். வெளிப்படையாக மீட்பரை அறிக்கையிட்டால் ஜமீன்தாரின் கோபாவேசம் தன்னை என்ன செய்துவிடுமோவென்று அஞ்சினார். அருளப்பன் தாவீது ஐயரும் அது விஷயத்தில் அவரைக் கட்டாயப்படுத்தவில்லை; ஆனால் அவருக்காகப் பல மணி நேரம் முழங்காலில் நின்றார். அதன் பலன் பொன்னப்பபிள்ளையின் உள்ளத்திலேற்பட்ட கொஞ்சம் தைரியம்! அந்த அளவு தைரியம் வரவே, அவர் நீறு பூசுவதை நிறுத்தி விட்டார்.

நாட்கள் பல உருண்டோடின. எட்டையாபுரத்துக்குச் சென்று அரை வருடக் கணக்கு முடிக்க வேண்டிய நாளும் வந்தது. பொன்னப்பபிள்ளை எட்டையாபுரம் சென்றார். ஜமீனெங்குமிருந்த மற்றக் கணக்கப்பிள்ளைகளும் ஆஜராயிருக்தனர். ஜமீந்தாரின் ஆக்ஞைக்கிணங்க, அவர்களனைவரும் நெற்றியிலும் மார்பிலும் புஜங்களிலும் பட்டை பட்டையாக நீறு தரித்திருந்தனர். பொன்னப்பபிள்ளை மட்டும் வெற்று நெற்றியுடன் காட்சி தந்தார்.

தலைமைக் கணக்கர் முத்துசாமிப் பிள்ளை அரண்மனைக் குள்ளிருந்து அவர்களை வரவேற்க வெளியே வந்தார். கணக்கர்களனைவரும் தலைகுனிந்து அவருக்கு வணக்கம் தெரிவித்துத், தத்தம் ஏடுகளுடனும் பணப்பைகளுடனும் படியேறி அவர் முன் நின்றனர். முத்துசாமிப் பிள்ளை அவர்களொவ்வொருவரையும் குசலம் விசாரித்தார். பொன்னப்பபிள்ளையைப் பார்த்ததும் வசீகரமுள்ள அவரது முகம் கறுத்தது; உதடு துடித்தது; புருவம் தெரிந்தது; கண்கள் சிவந்தன; வாய் திறந்ததும் சொற்கள் அக்கினிக் கங்குகளெனத் தெறித்தன.

'பொன்னப்பா, நெற்றியில் நீறு எங்கே? ம் ம் அவ்வளவு துணிச்சலா? கேள்விப்பட்டேன், நீர் அந்த மேலச் செய்த்தலை பாதிரியாரிடம் அடிக்கடி போவதையும், கிறிஸ்து மதத்தைப் படிப்பதையும் பற்றிக் கேள்விப்பட்டேன். நீறில்லா நெற்றியுடன் ஜமீந்தார் எஜமானின் வீட்டினுள் காலெடுத்து வைக்கக்கூடாது. போம் வெளியே. அரண்மனைப் பக்கமே வரக்கூடாது. வெளியே நின்று கணக்கை முடித்துக் கொள்ளும். சீக்கிரத்தில் உமது வேலையையும் இழப்பீர் என்பது ஞாபகமிருக்கட்டும் போமையா வெளியே," என்று இரைந்தார்.

பொன்னப்பபிள்ளை நின்ற இடத்திலிருந்து அசையவில்லை! அவர் மிகுந்த சாந்தமாயும், அமைதியாயும் முத்துசாமி பிள்ளையிடம், தான் ஏன் கிறிஸ்தவ வேதத்தை வாசித்து வந்தார் என்பதற்கான காரணங்களைத் தெளிவாக விளக்கிக் கூறினார். முத்துசாமிபிள்ளை முதலில் எரிச்சலுடன் அவருடைய வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டாரெனினும். இரட்சகரின் அன்பின் வரலாற்றை அவர் சொல்லும் பொழுது, உள்ளமுருகினார். பொன்னப்பன் பேசி முடித்ததும், முத்துசாமி அந்த வேத புத்தகமும், கிறிஸ்து சமயத்தைப்பற்றி கூறும் வேறு நூல்களிருப்பின் அவையும் தனக்கு வேண்டுமென்று கேட்டார். பொன்னப்பபிள்ளை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது? அவர் தம் நண்பருக்கு அந்நூல்களைச் சீக்கிரமே அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். பின்னர் கணக்குகளை முடித்து, மாலையில் ஊர் திரும்பினார்.

மறுநாட் காலையில் தாவீது ஐயரிடம் சென்று நடந்ததை எல்லாம் கூற, நன்றியால் அப்பக்தனின் உள்ளம் நிரம்பி வழிந்தது. இருவரும் முழங்காலில் நின்று கர்த்தருக்கு துதி செலுத்தினர். பின், ஐயர் தன்னிடத்திலிருந்த துண்டு பிரசுரங்கள், சிறிய மார்க்க நூல்கள் முதலியவற்றை பொன்னப்பரிடம் கொடுக்க, அவர் தன் தலையாரி மூலம் அவைகளை முத்துசாமிப் பிள்ளைக்கனுப்பினார். அவற்றைப் பெற்றுக்கொண்ட பிள்ளை அவையனைத்தையும் கருத்தாய் வாசித்து முடித்த பின், சில நாட் கழித்து, ஒரு ஆளை பொன்னப்ப பிள்ளையிடம் அனுப்பி எப்படியாவது ஒரு வேதாகமமும் (Bible) வேண்டும் என்று கேட்டார். பொன்னப்பர் அதைத் தாவீது ஐயரிடம் கூற, அவர் புதியம்புத்தூர் மிஷனெரி கோர்ண்ஸ் ஐயருக்கு ஒரு கடிதமெழுதி, அதில் சகல விருத்தாந்தங்களையும் கூறி, ஒரு பைபிள் அனுப்பி உதவ வேண்டினார். கோர்ண்ஸ் ஐயர் உடனே ஒரு ஆள் வசம் ஒரு சுவிசேஷப் பிரதியை நேரே முத்துசாமி பிள்ளைக்கே அனுப்பி வைத்தார்.

அப்பரிசுத்த நூல் தன் கையில் கிடைத்த நேரத்திலிருந்து, தன் ஏராளமான அலுவல்களின் மத்தியில், கிடைத்த நேரமெல்லாம், முத்துசாமிபிள்ளை அதை வாசித்து வரலானார். வாசிக்க வாசிக்க அவர் உள்ளம் நெகிழ்ந்தது. தன்னை யுணர்ந்தார். கடவுளையறிந்தார். ஆவியானவரின் கிரியைக்கு இடங்கொடுத்தார். 'மீட்பரின் சத்தம் கேட்டார்' நெஞ்சுருகித் தன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்துப், பேரானந்தமடைந்தார்.

ஒரு நாள் அவர் அரண்மனையிலுள்ள தன் காரியாலயத்தில் அமர்ந்து, தன்னை மறந்தவராய் பரிசுத்த ஆகமத்தை வாசிப்பதில் மூழ்கியிருந்தார். ஜமீந்தார் அவ்வறைக்குள் வந்ததையும் தன்னைப் பார்த்துக் கொண்டு நின்றதையும் அவர் அறியவில்லை. 'நீ ஏன் அதை வாசிக்கிறாய்? என்ற சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டதும் நடுக்கத்துடனும் வெட வெடப்புடனும் தன் எஜமானின் முன் எழுந்து நின்றார் பிள்ளை. தலை நிமிர்ந்து, கோபாவேசனாக நின்ற ஆஜானு பாகுவை நோக்கினார் அவர். கலங்கி நின்ற பிள்ளையினுள்ளத்தில் எங்கிருந்தோ வந்து விட்டது தைரியம்! (பேசுகிறவர் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர் என்பது அன்பரின் அருள்வாக்கன்றோ ! - மாற்கு 13:11 ) ஜமீந்தாரின் முகத்தை அவர் ஏறிட்டு நோக்கி, மிக்க மரியாதையுடன் உறுதியான குரலில் கூறினார்: **"இதை வாசிப்பதின் நிமித்தம் வேலையை விட்டே நான் நீக்கப்படினும், இதை வாசிக்கத்தான் செய்வேன், மகாராஜா."** ஜமீந்தார் இந்தப் பதிலையும் அதில் தொனித்த உறுதியையும் எதிர்பார்க்கவில்லை! அதே சமயத்தில் முத்துசாமி பிள்ளையைப் போன்ற திறமையும், உண்மையும் விசுவாசமுமுள்ள ஒரு ஊழியனை இழக்கவும் துணிவில்லை. சிந்தித்தார். கோபக்கனல் மறைந்தது, உதட்டில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. "சரி, சரி, வாசி." ஜமீன்தாரா இப்படிச் சொல்வது? எட்டையாபுரம் மகாராஜாவின் கருணை மொழிகளா இவை? ஆஹா, என்ன ஆச்சரியம்! கர்த்தர் கிருபை செய்தார், 'அவருக்கே துதி!!"

அது முதல் முத்துசாமி பிள்ளையின் மேனி நீற்றைக் கண்டிலது! சில நாட் கழித்து அவர் மேலச்செய்த்தலைக்குச் சென்றார். நண்பன் பொன்னப்ப பிள்ளையின் நெஞ்சை தன் சொந்த மகிழ்ச்சியினால் நிரப்பினார். இருவரும் தாவீது ஐயரிடம் சென்றனர். மூவரும் முழங்காலில் நின்றனர். அவர்களின் 'நன்றிக் கீதம் விண்ணில் கேட்டது.

CHRISTIAN
HISTORICAL
SOCIETY

To know more please visit our website :

https://christianhistoricalsociety.in/

# புத்தக அறிமுகம்

# “மறக்கப்பட்ட மாமனிதர்”

ஆசிரியர்


அருள்திரு G.P. ராஜா
87788 11994

David Mccullough என்கிற அறிஞர் இப்படியாக ஏன் கூறுகிறார் History is who we are and why we are the way we are. இதன் பொருள் வரலாறு என்பது நாம் யார், நாம் எதற்காக வாழ்கிறோம். எதை நோக்கி பயணிக்கின்றோம் என்பதை எடுத்துரைப்பதாகும். ஏன் இக்கூற்றை குறிப்பிட்டு காண்பிக்கிறேன் என்றால், வரலாறு என்பது மிக முக்கியமானது மேலும் உயிரூட்டக்கூடியது. அந்த வகையில் தென் நெல்லை மற்றும் வடநெல்லை பகுதிகளில் C.M.S மிஷனரியாக வந்து நற்செய்தி பணிகளை ஒப்படைப்போடு செய்து அதன் விளைவாக சிவகாசி பகுதிகளில் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய யூஸை. ராபர்ட் ரஸ்ட் மெடோஸ் (R.R. மெடோஸ்) ஐயர் அவர்களின் சாட்சியுள்ள வாழ்விற்கு உயிரூட்டும் வகையில் ஒரு வரலாற்றுத் தொகுப்பாக இந்நூல் அமைந்திருக்கிறது.

இந்நூல் Rev.R.R. மெடோஸ் ஐயர் அவர்களின் பிறப்பு. வாழ்வு மற்றும் திருப்பணிகள் குறித்து அறிய பல தகவல்களை உள்ளடக்கிய ஒரு சிறப்பான தொகுப்பு. இராக்லாந்து ஐயர் சிவகாசி பகுதிகளில் செய்த மிஷனரி பணிகளை அவருக்கு பின் 25 ஆண்டு தொடர்ச்சியாக செய்து அப்பணியை முழுமையாக நிறைவேற்றியவர் இவர். பாடுகள், போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகள் இருந்த சூழலிலும் பல திருச்சபைகளையும், பெண்களுக்கான சிறப்பு விடுதிகளையும் உருவாக்கி தந்தவர். இறைபணியோடு மருத்துவ பணிகளையும் செய்து மருத்துவமனையை கட்டி எழுப்பியிருக்கிறார். சாட்சியாபுரம் என்ற பெயரை மொழிபெயர்த்து சூட்டியிருக்கிறார். இப்படி Rev.R.R. மெடோஸ் ஐயர் செய்த மகத்தான இறைபணிகளின் விளைவால் இன்று சாட்சியாபுரம் பகுதி இருவட்டகை மன்றங்களாக வளர்ந்து 18 குருசேகரங்களாக பெருகி இருக்கின்றது.

திருப்பணியை மிகுந்த ஒப்படைப்போடு நிறைவேற்றுவதற்கு நமக்கு ஆக்கம் ஊக்கமும் தருகிற ஒரு வழிகாட்டி நூலாய் இது இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நல்ல படைப்பை மிஷனெரி பாரத்தோடு. மிகுந்த சிரத்தை எடுத்து, எல்லோருக்கும் இவ்வரலாறு சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் நேர்த்தியாய் தகவல்களை சேகரித்து “மறக்கப்பட்ட மாமனிதர்” என்ற தலைப்பில் ஒரு வரலாற்று நூலாக உருக்கியுள்ள அன்புக்குரிய நண்பர் அருள்திரு. G.P. ராஜா அவர்களை மனதார பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட வரலாற்று ஆய்வுகள் செய்து அதனை வெளி கொண்டுவருவதில் தனிதிறமை பெற்றவர்.

**அருள்திரு. ஜா. ஜோ டேனியல்**




## புத்தகம் கிடைக்குமிடம்

அருள்திரு G.P.ராஜா
87788 11994

வரலாற்றுச் சங்க
அலுவலகத்திலும் கிடைக்கும்

91767 80001



# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர் த. ஜான்சிபால்ராஜ்
jansy.emmima@gmail.com

## அத்தியாயம் 03

டோனாவூர் என்பது தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு புதுமையான ஊர்ப்பெயர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தனது போதனைகளால் கிறிஸ்தவத்தை ஏற்ற மக்களுக்காக இரேனியஸ் என்ற ஜெர்மன் நாட்டு மிஷனெரி ஏற்படுத்தியதுதான் அவ்வூர்.

அவ்வூரைச் சூழ நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் அழகாக அணிவகுத்து பச்சை வண்ண அரண் போல் காட்சியளித்தது. எங்கிருந்து பார்த்தாலும் தொட்டு விடும் தூரத்தில் அவை நீண்டு கொண்டே சென்றன. விழிகளை ஓடவிட்டாலும் சில நிமிடங்கள் ஆகும் பார்வையின் மேய்ச்சலை நிறுத்துவதற்கு...! இயற்கை அழகை மொத்தமாகச் சுமந்து கொண்டு அசையாமல் நின்றன; பசும்போர்வைப் போர்த்திய அம்மலை முகடுகள், முகில்களால் எப்போதும் போர்த்தப்பட்டே கிடந்தன.

குடியிருப்புப் பகுதிகளைத் தவிர்த்து மற்ற இடங்களிலெல்லாம் கருகருவென்று நீண்டு வளர்ந்த பனைமரங்கள் தனித்தனியாகவும் குழுமியும் உடலை அசைக்காமல் தலையை மட்டும் ஆட்டி விசிறிக் கொண்டிருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாய் பனையோலைகளால் வேயப்பட்ட நிறைய சிறு சிறு குடிசைகள். ஒருசில வீடுகள் மட்டுமே ஓட்டுக் கூரைகள்.

ஊரைச் சுற்றி புலியூர்குறிச்சிக் குளம், செங்குளாக்குறிச்சி குளம், வடுகச்சிமதில் குளம் என்று குளங்களால் சூழப்பட்டு இருந்தது அந்த அழகிய ஊர். குளங்கள் சிவப்பு நிறத்தில் தண்ணீரால் நிறைந்து ததும்பி நின்றன. செம்மண் தரை, தண்ணீரில் கரைந்து சிவப்பு நிறத்தில் திறந்து விடப்பட்ட கலுங்கின் வழியே அவசர அவசரமாய் ஓடிக் கொண்டிருந்தது, விளையக் காத்துக் கிடந்த நெல் வயல்களுக்குள்...!

பச்சைப்பசேல் என்று நெல் நாற்றுகள் தலையசைத்து காற்றோடு ஓய்வின்றி பேசிக்கொண்டே இருந்தன...!

அன்று டோனாவூருக்குள் வண்டி நுழையும் போது மாலை ஆறு மணி. மாடுகள் சிறிதுநேர ஓய்விற்குப் பிறகு மீண்டும் தொடர்ச்சியாக நான்குமணிநேர பயணத்தால் களைத்து நடந்தன.

கோவிலில் இருந்து தப்பித்து வந்த லட்சுமியைப் பற்றின தகவலை உடனடியாக உவாக்கர் தம்பதியினருக்குத் தெரிவிக்க ஏமி வண்டியோட்டி மணியனை அனுப்பியிருந்தார். இரவுக்குள் கோவில் ஆட்கள் லட்சுமியைத் தேடி வந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தார் ஏமி.

இது தனிப்பட்ட பிரச்சனையல்ல. சமயம் சார்ந்த பெரும் பிரச்சனை என்பதை ஏமி அறியாமலில்லை. ஆனாலும் எதையும் எதிர்க்கொள்ளும் மனதைரியமும் அளவுகடந்த இறைநம்பிக்கையும் அச்சம் நீக்கி அறிவார்ந்த சிந்தனையில் அவரை ஆழ்த்தியிருந்தது.

டோனாவூர் தேவாலயத்தில் மாலைநேர வழிபாட்டிற்காக ஆலயத்தத்திற்குள் சென்று கொண்டிருந்த உவாக்கர் தொலைவில் ஏமியின் வண்டிவரும் சத்தத்தை கவனித்தார். ஒரு கணம் நின்று திரும்பியவர்... அதெப்படி சாத்தியம்? இருக்க முடியாது... வேறெதோ வண்டி... என்று ஆலயத்தை நோக்கி மீண்டும் திரும்பி நடக்க... வண்டி சத்தம் மிக அருகில் நெருங்கி வருவதை உறுதிப் படுத்தியது.

ஏன்...என்னவாயிற்று...நெற்றிச் சுருங்க மனம் படபடத்தது.

வெளிச்சுவற்றின் அருகில் சென்று எட்டிப்பார்த்தார். மணியன் இறங்கி வேகமாக உவாக்கரை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

என்னாயிற்று?

ஐயா, இன்று காலை ஒரு பத்துமணி இருக்கும்....... என்றவன் ஒன்றுவிடாமல் ஒப்பித்து ஓய்ந்தான்.

அப்படியா..?!

ஆமாம்... ஏமியம்மா தனக்கே ஒரு குழந்தை பிறந்துவிட்ட மகிழ்ச்சியில் இருக்கிறாங்க. ஆனா, கோயில் பொண்ணுங்கிறதால என்ன செய்றதுங்கிற நெனப்பில் இருக்காங்க. நீங்க மட்டும் அங்க இருந்திருந்தா எந்த பயமும் இருக்காது.

சரி, ஆலய ஆராதனையை முடித்தப் பிறகு இதைக் குறித்து பேசுவோம். நீ போய் சற்று ஓய்வெடு. மாடுகளையும் கவனி போ. என்றவர் ஆலயத்திற்குள் நுழைந்தார்.

எதற்கும் கலங்காத உவாக்கருக்கும் கோவில் பெண்ணைப் பற்றிய லேசான மனக்கலக்கம் ஏற்பட்டது. எல்லாம் நலமாக முடிய வேண்டுமென்று மனதார பிராத்தனைச் செய்து கொண்டார். முடிந்ததும் அவசர அவசரமாக வீட்டிற்கு வந்தார்.

திண்ணையிலிருந்த மணியன் எழுந்து நின்றான்.

வா... உள்ளே...

மணியனின் தோளை அணைத்து கொண்டு வீட்டிற்குள் கூட்டிச் சென்றார். உள்ளே வந்து, பாயை எடுத்து விரித்து படுத்திருக்கலாமே. ஏன் வெளியிலேயே நின்றாய்? அவரது பேச்சில் ஆழ்ந்த கரிசனையும் அவர் சற்றுமுன் போதித்த இயேசுவின் அன்பும் நிறைந்திருந்தது.

ஆலயத்திற்குள் வா, என்று அவர் அவனை அழைக்கவில்லை. அது அவரவர் விருப்பம். யாரையும் கட்டாயப்படுத்தியோ அன்பை வெளிப்படுத்தியோ இதுவரை யாரையும் அவர் தேவாலயத்திற்கு அழைத்ததே இல்லை .

அந்த அவரது பண்புதான் நிறைய சமயப் பாகுபாடற்ற நண்பர்களை அவருக்குப் பெற்றுத் தந்தது. அவரது தமிழ்மொழிப் புலமையும் அதற்கு மற்றுமொரு காரணம்.

சரியாகத் தமிழ் அறியாத மனைவியின் குழம்பிய பார்வைக்கு லட்சுமியின் திடீர் வருகையைப் பற்றின விசயத்தை ஆங்கிலத்தில் எடுத்துக் கூறினார். மனைவியின் முகத்தில் ஒருவித அச்சமும் வியப்பும் பரவியதை மணியன் கவனித்தான்.

சரி, நாளை அதிகாலை நாம் பண்ணைவிளைக்கு கிளம்புவோம்....என்றார்.

சரிங்க ஐயா. ஆனா...இரவே அங்க ஏதும் பிரச்சனை ஏற்பட்டிருமோன்னு பயமா இருக்குய்யா... அதெல்லாம் ஒன்றும் வராது மணியன். கடவுள் கவனித்துக் கொள்வார். நீ ஓய்வெடு.

சரிங்க ஐயா.

ஆனாலும் உவாக்கரின் மனம் உறங்க மறுத்தது. இரவோடு இரவாக கோவில் பொறுப்பாளர்கள் தகவல் அறிந்து பிரச்சனையாக்கி விட்டால்...?

ஏமி இன்னும் அவர்களோடு போராடி கருத்துரைக்குமளவு தமிழில் தேர்ச்சிப் பெறவில்லை... என்ன செய்வது... !?

அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். எழுந்து ஜெபம் செய்தார். பிறகு அமைதியாக அறைக்குள் நடந்து கொண்டே சிந்தித்தார்.

அவரது மனைவி எழுந்து அவர் அருகில் சென்று,

டியர், இடஸ்

அன்னெக்ஸ்பெக்டெட்லி.

பட் இட் டிடின்ட் ஹப்பன் வித்தவட் காட்.சோ டோன்வரி மோர்.

ஸ்லீப் நௌ.

லெட்ஸ் லுக் அட்த மானிங். என்ற மனைவியின் அமைதியான வார்த்தைகள் அவருக்குள் தளர்ந்த நம்பிக்கையை மேலும் வலுவாக்கி அமைதியை ஏற்படுத்த கண்ணயர்ந்தார்.

பண்ணைவிளையில்...

மலர்ந்த முகத்தோடு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த லட்சுமியின் முகத்தைத் தாய்மைப் பொங்க பார்த்துக் கொண்டே படுத்திருந்தார் ஏமி.

அன்று காலை லட்சுமி தனக்கு நேர்ந்த கொடுமைகளைக் கதறிக் கதறி அழுது கூறிய அந்த நிகழ்வின் வலி ஏமியின் மனத்தில் தொற்றிக் கொண்டு வலியாய் வலித்தது.

பதினொரு வயதே நிறம்பிய குழந்தை. அவளது தந்தை வயதையும் தாண்டிய ஆண்களின் காமத்திற்குப் பலியாக்கும் பயிற்சிகளாக உடலளவிலும் மனதளவிலும் அளிக்கப்பட்ட கொடுமையைச் சிறுமியின் வார்த்தைகள் கொப்பளித்திருந்தன.

இதற்கு முன்பு பக்தியின் சாயம் பூசப்பட்ட சமயம் சார்ந்த இம்மரபினைக் குறித்து மேலோட்டமாக ஏமி கேள்விப்பட்டிருந்த போதும்.. இத்தனைக் கொடுமையான ஒன்றாக இருக்கும் என அவர் கருதவே இல்லை.

தேவதாசிமுறை என்பது ஆரம்பத்தில் கோவில்களில் புனிதப்பணி செய்வதற்காக பெண் குழந்தைகளை அர்ப்பணிக்கும் சிறந்தமுறையாகவே இருந்து வந்தது. தேவதாசிகள் மக்களால் புனிதமானவர்களாக போற்றப்பட்டனர். கோவில் விழாக்களிலும் குடும்ப நற்காரியங்களிலும் அவர்களை முன்னிலைப்படுத்தி மரியாதைகள் செய்திருக்கின்றனர். அப்பெண்கள் தெய்வத்தொண்டையே பிறப்பின் நோக்கமாகக் கொண்டும் வாழ்ந்திருக்கின்றனர்.

ஆனால் கோவில்களில் அர்பணிக்கப்பட்ட இத்தேவதாசியர் காலப்போக்கில் ஆட்சி மாற்றங்கள், அந்நியர் படையெடுப்பு, குறுநில மன்னர்களிடையே ஏற்பட்ட குழப்பநிலைகள் போன்ற மாற்றங்களால் கோவில் நிர்வாகம் மன்னர்களின் நேரடி பார்வையிலிருந்து விடுபட்டதால் கோவில்கள் அமையப்பெற்ற அந்தந்த ஊர் பெரியவர்களின் பொறுப்பில் வந்தது.

இந்நிலைக்குப் பின்னர் தேவதாசிகளின் வாழ்க்கை அந்தப் பெரிய மனிதர்களை நம்பியே இருக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிப் போனது. இதனால் அவர்களது அனைத்துப் பொருளாதார தேவைகளுக்கும் அப்பெரிய மனிதர்களையே எதிர் நோக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறான சூழல்களால் பெரும்பாலானோர் மெல்ல மெல்ல தங்கள் புனிதத் தன்மையை இழந்து, இறைப்பணியை இரண்டாம் நிலையாக்க வேண்டியதாயிற்று. மிக விரைவில் பொது மகளிராகவே பார்க்கப்படும் நிலையை அடைந்தனர். நாளடைவில் “தேவரடியாள்” என்று அழைக்கப்பட்ட அவர்கள் “தாசி” என்ற வசைச் சொல்லுக்கு ஆளாகும் நிலையையும் எட்டினர்.

தேவதாசி முறையைக் குறித்து தாம் அறிந்து வைத்திருந்த இச்செய்திகளை அவரது மனம் அதன் உண்மைத்தன்மையோடு இணைத்துப்பார்த்து வெகுண்டது.

லட்சிமியைப்போல் இன்னும் எத்தனையெத்தனை

குழந்தைகள் வேதனையில் தத்தளிப்பார்கள்? சொல்லவும் முடியாமல் வெளியேறவும் முடியாமல் பெற்றோரைப் பிரிந்து இந்தக் கொடுமைகளுக்குள் உடைந்து கிடப்பார்கள்?

ஏனிந்த பெற்றோர்கள் இந்தப் புனிதமென்ற மேற்பூச்சை பூசிக்கொண்டு தங்களையே ஏமாற்றி குழந்தைகளைப் பலிகடாக்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்?

லட்சுமி கோவிலில் இருந்து தப்பித்து தனது தாயிடம் சென்றிருக்கிறாள். என்னிடம் தெரிவித்த இந்தக் கொடுமைகளை தன் தாயிடம் கூறாமலா இருந்திருப்பாள்?

இவ்வுண்மைநிலை மக்களுக்கும் இலைமறைக்காயாகத் தெரிந்திருந்தும் தொடர்ந்து இத்தகைய பெண் குழந்தைகளைத் தெய்வத்திற்கு அர்ப்பணித்தல் என்ற பெயரில் தனியொரு சமூகத்தின் உடல் பசியாற்ற படைக்கப்படும் அவலம் எத்தனைக் கொடுமையானது?!

நிச்சயம் இதை நம்மால் இயன்ற அளவு தடுத்தாக வேண்டும். இனியும் இதைக் கண்டு கொள்ளாமல், பைபிளை தூக்கிக் கொண்டு சமயப்பணியையோ சமூகத்தை மாற்றுகிறேன் என்று செல்வதையோ கடவுள் அர்த்தமுடையதாகக் காணவே மாட்டார்....! தனக்குள் வெகுண்டெழுந்த இச்சிந்தனைக் காட்சிகள் பந்தயத்திற்குப் புறப்பட்டக் குதிரைகளைப் போல் சீற்றங் கொண்டதை உணர்ந்தார்.

மீண்டும் மீண்டும் லட்சுமியின் அந்த அழுகுரல் செவியில் மோதியடித்துக் கொண்டேயிருந்தது. தூக்கமின்றி எழுந்து மன அமைதலுக்காக முழங்காலில் நின்று இறைவேண்டலில் ஆழ்ந்தார். என் இறைவா, நான் என்ன செய்ய வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தும். உம்மை இத்தனைக்காலம் நொறுக்கிய இச்சம்பவம் உம்மால்தான் இன்று என்னிடம் வந்து அடைந்ததென்று நம்புகிறேன். உமது வழிநடத்தலுக்கு என்னை முற்றும் அர்ப்பணிக்கிறேன். எல்லாவற்றையும் நீர் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று ஜெபம் செய்து முடித்தார்.

மனம் லேசாகியது. அருகில் நிம்மதியாகப் படுத்திருந்த லட்சுமியைப் பார்த்தபடியே கண்கள் தூக்கத்தையும் தழுவிக்கொண்டன.

காலையில் கண் விழிக்க, ஏமிக்கு வழக்கத்தைவிட சற்று அதிக நேரம் எடுத்துக் கொண்டது. படுக்கையில் லட்சுமி இல்லை...!

லட்சுமி...

இங்கே இருக்கிறேன் அம்மா.

என்ன செய்கிறாய்? கேட்டவாறே எழுந்து அமர்ந்தார் ஏமி.

அறை முழுவதையும் பெருக்கி சுத்தம் செய்து கொண்டிருந்தாள். கோவிலில் தினசரி பணிகளுள் அவளது அதிகாலை பணி அது. இனி லட்சுமிக்கு ஏமிதான் அன்னை, கடவுள்... எல்லாம். அவர் இருக்கும் இடம் தான் அவளது கோவில். இதுவரை கோவில் பெண்ணாகியிருந்த லட்சுமி இனி ஏமியின் பெண். ஆம்...ஏமி குடியிருக்கும் இல்லம் அவளுக்கு, தான் வழிபட்டுவந்த கோவிலாகவே தெரிந்தது. சற்றும் தயக்கமின்றி கோவிலை சுத்தம் செய்ததைப் போன்றே வீட்டையும் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

லட்சுமியின் உள்ள உறுதி ஏமியை அசைத்தது. இனிமேல் கோவில் நிர்வாகத்தால் என்ன நடக்குமோ என்ற அச்சத்தின் மிச்சம் லட்சுமியின் பூரண நம்பிக்கையின் பிரதிபலிப்பால் விலகியோடியது.

லட்சுமி....இரவு நல்லா தூங்கினாயா?

ஆமாம். நேற்றுதான் நிம்மதியாகத் தூங்கினேன் அம்மா. என்ற குரலில் லேசான சோகமும் ஒட்டியிருந்தது.

கையிலிருந்த விளக்குமாற்றை கீழே போட்டுவிட்டு ஏமியிடம் மெதுவாக நகர்ந்து வந்தாள்.

வேகமாக தனது கையை நீட்டி இழுத்து அணைத்துக் கொண்டு உச்சிமுகர்ந்து முத்தமிட்ட ஏமி....

இதற்குள் குளித்தும் விட்டாயா?

ம்....ஆமாம். குளிக்காமல் எந்த வேலையும் செய்யக் கூடாது கோவிலில்...

முகம் மலர்ந்து சிரித்தார் ஏமி. தனது வாழ்வில் எதிர்பாராத வசந்தம் தனக்குள் வந்து தங்கியதாக உணர்ந்தார். ஏமியின் செவிகள் உவாக்கரின் வருகைக்காக, அவரது கருத்தைப் பெறக் காத்திருந்தன.

காலைப் பிராத்தனைக் கூடுகை முடிந்து உணவு வேளையும் முடிய மணி பத்தைத் தாண்டியிருந்தது.

ஏமியும் உடனிருந்த பெண்களும் இனி என்ன நடக்கப் போகிறதோ என்ற பயத்தில் குழப்பத்தில் இருந்தனர். முந்தயநாள் இருந்த கலகலப்பு இல்லை. ஊருக்குள்ளும் விசயம் கசிந்து ஆளாளுக்கு கற்பனையில் புதுப்புது கதைகளைக் கட்டி பேசிக் கொண்டனர். அவ்வப்போது ஏமி வீட்டின் வெளிச் சுற்றுக்கட்டில் நின்று உள்ளே கோவில் பெண்ணான லட்சுமியைப் பார்க்க வருவதும் போவதுமாகவே இருந்தனர்.

ஏமியும் உடனிருந்தோரும் வெளி வாசலிலேயே கவனித்தபடி தங்களுக்கான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். கோவிலிலிருந்து எப்போது வேண்டுமானாலும் ஆட்கள் வரலாம், அதற்குமுன் உவாக்கர் தம்பதியினர் வந்துவிட்டால் ஆறுதலாக இருக்கும்..! இரண்டுவித எதிர்பார்ப்பில் மனம் சோர்வடைந்து போயிருந்தது அனைவருக்கும்.

ஆனால் லட்சுமி மட்டும் இறகொடித்து அடைத்து வைக்கப்பட்ட பறவை விடுதலையோடு வெளியே சிறகடிப்பதைப் போல அகம் மலர்ந்திருந்தாள்.

ஜல்....ஜல்...ஜல்... ஏமியின் வில்வண்டியின் வருகை தொலைவில் கேட்க, எல்லோரும் ஒருசேர எழுந்து ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து வெளியில் செல்ல விரைந்தனர்.

ஏமியும் லட்சுமியும் வாசலருகே நின்ற வேப்ப மரத்தடியில் தாயும் சேயும் போல் அருகருகே நின்றிருந்தனர் வெளிவாசலையே பார்த்தபடி.!

வண்டி வந்து நிற்கவும் உவாக்கர் முதலில் இறங்கி மனைவியைக் கைக்கொடுத்து இறக்கி விட்டு உள்ளே விரைந்தார். ஏற்கெனவே வெளியில் லட்சுமியை பார்க்கும் ஆசையில் ஆங்காங்கே நின்றவர்களும் அழைப்பையோ அனுமதியையோ எதிர்பாராமல் அவர்களோடுசேர்ந்து உள்ளே நுழைந்தனர்.

ஏமி இலட்சுமியின் ஒரு கையை பிடித்தபடி உவாக்கருக்கு எதிரே இரண்டடி நடந்து சென்றார்... இரு, வருகிறேன் என்று கையசைத்த உவாக்கர் அருகில் வந்து, லட்சுமியிடம்... சுகமாக இருக்கிறாயா லட்சுமி? என்றார் புன்னகைத்தபடியே.

ம்.... என்று வேகமாக தலையசைத்தாள். அனைவரும் வீட்டிற்குள் சென்றனர். ஊர் மக்கள் வாசலைசுற்றி நின்றிருந்தனர்.

யாராவது அங்கிருந்து வந்தார்களா நேற்று? - உவாக்கர்.

இதுவரை இல்லை.- ஏமி.

சரி, இனி என்ன செய்யலாம்?

நல்லது தானே... தெரியாமலே இருந்து விட்டு போகட்டும். நம்மூர் ஆட்கள் யாரும் கோயில்ல போய் சொல்ல மாட்டாவ- இது பொன்னம்மாள்.

உவாக்கர் ஏமியைப் பார்த்தார்.

ஏமியிடம் எந்த பதிலும் இல்லை. லட்சுமியின் தலையை வருடிக் கொண்டிருந்தார் ஏமி.

மணியன்....

ஐயா..சொல்லுங்க!

கொஞ்சம் சிரமம் பார்க்காமல் உங்களோடு யாரையாவது கூட்டிக் கொண்டு, நேராக அந்தக் கோவிலுக்குச் சென்று லட்சுமி இங்கு இருப்பதைத் தெரிவித்து விட்டு வாருங்கள்.

ஐயோ....வேண்டாம் ஐயா.

ஆமாம் ஐயா...சொல்ல வேண்டாம்.

அந்தப் பெண்ணை கூட்டிட்டுப் போய் ரொம்ப கொடுமைப் படுத்துவாங்க.

பாவம்.... அதுவாதான வந்துச்சி. இங்கயே உங்களோடயே, நம்மூர்லயே இருக்கட்டுமுங்க.... இப்படி ஆளுக்கொரு பதிலை கூறினர் ஊரார்.

ம்...அவர்களாக தெரிந்து வந்தால் வரட்டும்...என்றார் ஏமியும். அதுதான் சரி என்பதைப் போல உவாக்கரின் மனைவியும் தலையசைத்தார்.

இல்லையில்லை... ஏதாவது ஒரு முடிவு வரவேண்டும். நாம் சரியான பாதையில் சென்றுதான் எதையும் வெற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் மனிதர்கள் பார்வையிலும் கடவுளின் பார்வையிலும் சரி.

மணியன் கொஞ்சம் ஏதாவது சாப்பிட்டு விட்டு உடனே புறப்படு...

சரிங்க ஐயா.

லட்சுமி ஏமியை ஏறிட்டு, பதட்டமாய் பார்த்தாள்....!!

**முன்பக்க அட்டை: படம் ஏமி அம்மாவும் குழந்தைகளும்**

**தொடர்வாள் லட்சுமி...**

ஆக்கியோன்

## பேராசிரியர் தே.அ.கிறிஸ்துதாஸ்




## புத்தகம் கிடைக்குமிடம்

- திருநெல்வேலி திருமண்டல புத்தக நிலையம்
- பேராலய புத்தக நிலையம்(CSI), நாகர்கோவில்
- வரலாற்றுச் சங்க அலுவலகம்

9176780001



# விதைத்த விதை வீண்போய் விடவில்லை...

இரண்டொரு ஐரோப்பிய பாதிரிமாரும், சில இந்தியவாலிபரும், வயோதிபரும் அச்சிற்றூரிலிருந்த ஒரு தெருமுனையில் நின்று, பாடல்கள் பாடி ஒரு கூட்டத்தைச் சேர்த்து, இயேசு நாதரைப்பற்றி அச்சடித்த ஒற்றைத்தாள் பிரதிகளையும் சுவிசேஷப் பங்குகளையும் கொடுத்து முடிக்கவும், அவ்வாலிபரில் ஒருவர் ஒரு அழகான சொற்பொழிவாற்றி நிறுத்தினார். மேலவயலி என்ற அக்கிராமத்தில் சுவிசேஷப் பிரச்சாரப் பணியில் அன்று ஈடுபட்டிருந்தவர்கள் கீர்த்திப்பெற்ற T. G. ராக்லந்து, D. ஃபென், R. மெடோஸ் என்ற ’வடநெல்லை மூவரும், அவர்களின் சகவூழியரான W. T. சத்தியநாதன், D. வேதநாயகம், J. கொர்னேலியு, ஜோசப் டேவிட் முதலானவர்களும், மற்றும் சிலருமாவர். பிரசங்கம் செய்த வாலிபன் பிற்காலத்தில் ‘வாகைக்குளம் வேதநாயகம் ஐயர்’ என்று புகழ்பெற்ற D. வேதநாயகம். குழுமிநின்று நற்செய்தி கேட்டவர்கள் அவ்வூரிலிருந்த ரெட்டிமார். அவர்கள் அமைதியாகவே கேட்டுக்கொண்டிருந்தார்கள்; கொடுத்த ஒற்றைத்தாள் பிரதிகளை வாங்கிக் கொண்டார்கள்; அவர்களில் சிலர் காலணா (இன்றைய நாணயத்தில் ஒன்றரைக் காசு) கொடுத்துச் சுவிசேஷ பங்குகளையும் வாங்கிக் கொண்டார்கள். அத்துடன் சரி!. பிரசங்கக் கூட்டத்தார் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டபொழுது, ஊர் எல்லை வரை கூடப்போய் வழியனுப்பியும் கொண்டார்கள். அவர்கள் கடமையும் முடிந்தது!

ஆனால் வேதநாயகம் அன்று விதைத்த விதை வீண்போய் விடவில்லை. ஒரே ஒரு மனிதனினுள்ளத்திலாயினும் அவ்விதை முளைக்கவாரம்பித்து விட்டது!. அம்மனிதன் ஒரு ரெட்டி வாலிபன்; வாசிக்கக் கற்றவன்; அன்று சுவிசேஷப் பங்கொன்று வாங்கிக் கொண்டவன். அவன் தினந்தோறும் அப்பரிசுத்த நூலை வாசித்துத், தன் உள்ளத்தில் பாவ உணர்வ கொண்டதுடன், அப்பாவங்களினின்று தன்னை விடுவிக்கக் கூடிய இரட்சகரையும் கண்டு கொண்டான். அவ்வுத்தம நேசரை அறிந்த பின் அவன் சும்மாயிருப்பதெங்ஙனம் சாத்தியமாகும்? தன் உள்ளத்தை நிரப்பிய சந்தோஷத்தைப் பிறர்க்கறிவியாதிருக்கக் கூடுமா?. தவிரவும், தான் இயேசு நாதரின் பிள்ளை என்பதை வெளியில் சொல்லிக் கொள்ளாதிருக்கவேனும் முடியுமா? முடியாதே?.

அவ்வாலிபன் தன் பெற்றோரிடமும் சுற்றத்தாரிடமும் சென்று “நான் கிறிஸ்தவனாகப் போகிறேன். அந்த மார்க்கமே உண்மையும் ஜீவனுமுள்ள மார்க்கம் என்றறிகிறேன்” என்று பகிரங்கமாக அறிக்கை செய்தான். அதைக்கேட்ட அவர்கள், அம்மனிதனைத் துன்புறுத்தினால் பயனொன்றுமிராது, புத்தி சொல்லியும் விவாதித்தும் தான் அவனைச் சீர்ப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துத், தம்பி, அன்று வந்து பிரசங்கம் பண்ணிவிட்டுப் போனார்களே அந்த வேதக்காரர், அவர்களெல்லாரும் ரொம்ப நல்லமனிதர் என்றெண்ணிக் கொண்டாயா? வேதத்தைப் போதிக்கிற அவர்களில் ஒருவனாவது, போதிக்கிறபடி நடக்கிறதில்லை. சும்மா, கூலிக்காகப் பிரசங்கிக்கிறவர்கள்!. அயோக்கியன்கள்!. வேண்டுமானால், அன்று பிரசங்கம் பண்ணினானே, ஒரு வாலிபன், அந்த பிரசங்கியுடன் நீ போய்த் தங்கிச், சில நாள் இருந்து பார்த்து, நாங்கள் சொல்வது சரியா, தப்பா என்று கண்டுபிடி, என்றார்கள். அவன் அப்படிச் செய்யப் போவதில்லையென்பது அவர்களின் எண்ணம். ஆனால் அவனோ அந்த வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, “சரி, போய்ப் பார்க்கிறேன்” என்று கூறி, எவ்வளவு தடுத்தும் கேளாமல் புறப்பட்டு விட்டான்.

அவ்வாண்டு (1855) ராக்லாந்து ஐயரும் பிரசங்கக் கூட்டத்தாரும் சிவகாசிக் கருகில் கூடாரங்களடித்துத் தங்கியிருந்தார்கள். நமது ரெட்டியார் வாலிபன், பலவிடங்களிலும் விசாரித்து விசாரித்துக், கடைசியில் கூடாரங்களைக் கண்டு பிடித்து வந்துசேர்ந்து விட்டான். அங்கு அவன் வேதநாயகத்தைக் கண்டு பிடித்துத் தன் விருத்தாந்தத்தைச் சொல்லி, ‘ஐயா, உங்களுடன் ஒரே ஒரு மாதம் நான் தங்கிக்கொள்ள அனுமதி தாருங்கள்’, என்று கேட்டு, அதற்குக் காரணமாகத் தன் பெற்றோர் ‘அவனுடன் தங்கிப்பார்’ என்று தனக்கு விட்ட சவாலைக் கூறாமல், “நான் உங்கள் வேதத்தைப் பற்றி இன்னமும் அதிகமாய் அறிந்துகொள்ள ஆசையாயிருக்கிறேன்”, என்று கூறித் தன் உள்ளான நோக்கத்தை மறைத்துவிட்டான். வேதநாயகம், ராக்லாந்து ஐயரிடம் கலந்தாலோசித்து, அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

ஒருமாதகாலம் ரெட்டியார் வேதநாயகத்துடனும் பிரசங்கிமாருடனும் வசித்து, அவர்களனைவருமே தாங்கள் போதித்து வந்தபடியே தங்கள் சாதனையிலுமிருந்ததை நேரில் கண்டு, தன் பெற்றோரும் உறவினரும் சொன்னதனைத்தும் தப்பு என்று அறிந்ததுமல்லாமல், கிறிஸ்து மார்க்கச் சத்தியங்களை மேலுமறிந்து, விசுவாசத்தில் வளர்ந்து அம்மாத இறுதியில் ராக்லாந்து ஐயரிடம் பரிசுத்த ஞானஸ்நானம் பெற்று ஊர்திரும்பினார். ஊருக்கு வந்து சேர்ந்தது முதல் தன் இனத்தவருக்குச் சத்திய சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத், தன் வார்த்தையினாலும், வாழ்க்கையினாலும் பல மக்களைக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தார்.

அருளானந்த ரெட்டியார் என்றறியப்பட்ட அக்கிறிஸ்தவ பக்தன், வாகைக்குளம் வேதநாயகம் ஐயர் என்று பின்னாளில் புகழ்மிகப் பெற்ற அந்த வாலிப வேதநாயகம் பிரசங்கியாருடன் தன் வாழ்நாள் முழுவதும் உற்ற நண்பனாயிருந்து, வட திருநெல்வேலியில் அநேக சபைகள் தோன்றக் காரணமாய் விளங்கினார். இந்நூலில் வேறொரு வரலாற்றுத் துணுக்கில் காணப்படும் ஒண்டிவீரன் அவரால் குணப்படுத்தப்பட்ட பலரில் முதலாவதானவர்.

I J ஜெபராஜ்

# வரலாற்று புத்தக வெளியிடு

வரலாற்று பேராசிரியர் அருள்திரு D.A கிறிஸ்துதாஸ் ஐயரவர்கள் 1979 ஆம் ஆண்டு எழுதிய வட நெல்லை அப்போஸ்தலன் கனம் ராக்லாந்து ஐயரவர்களின் ஜீவிய சரித்திர வரலாற்று நூலின் மறுபதிப்பு புத்தகம் வெளியீடு...

திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் ராக்லாந்து சரிதை பதிப்புக் குழு முயற்சியினாலும், நன்கொடையாளர்களின் உதாரணமான நன்கொடையினாலும், வரலாற்றுச் சங்க உறுப்பினர்களின் ஆதரவினாலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவகாசி சாட்சியாபுரம் 132 வது தவச உற்சவப் பண்டிகை முதல் நாள் ஆராதனையில் இரவு (07.07.2022) அன்று தவச உற்சவப் மேடையில் வைத்து வெளியிடப்பட்டது.

சிவகாசி வட்டகைத் தலைவர்கள் அருள்திரு. டேவிட் ஜெபராஜ் ஐயா புத்தகத்தை குறித்த அறிமுகத்தை வழங்கினார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டகைத் தலைவர் அருள்திரு ஜான் கமலேசன் ஐயா ஜெபிக்க அருள்திரு.முனைவர்.A.இராயப்பன் ஐசக், (பொறுப்பு முதல்வர், முட்டம் இறையியல் கல்லூரி, கன்னியாகுமரி திருமண்டிலம்,) அவர்கள் வெளியிட வட்டகைத் தலைவர்கள் அருள்திரு. டேவிட் ஜெபராஜ் ஐயா முதல் புத்தகத்தை பெற்றுக் கொண்டார்கள் இரண்டாவது புத்தகத்தை வட்டகைத் தலைவர் அருள்திரு ஜான் கமலேசன் ஐயா அவர்கள் வெளியிட நெல்லை திருமண்டல உக்கிரமன்கோட்டை குருவானவர் அருள்திரு ஜெபசிங் பெற்றுக்கொண்டார்கள்.

சிறப்பாக இப் புத்தகம் வெளிவர உதவி செய்த ஜெபித்த நன்கொடையாளர்களுக்கும், இந்த புத்தகத்தை மறுபதிப்பு செய்து வெளியிட உதவிய பேராசிரியர் D.A கிறிஸ்துதாஸ் ஐயா அவர்கள் குடும்பத்திற்கும், அனைத்து குருவானவர்கள் மற்றும் சிவகாசி ராக்லாந்து சரிதை பதிப்புக் குழு உறுப்பினர்களுக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இந்த வரலாற்று புத்தகம் வெளிவர ஜெபித்த, உழைத்த, கொடுத்த மற்றும் கலந்து கொண்ட அனைத்து சபை மக்களுக்கும் குறிப்பாக வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள் யாவருக்கும் வரலாற்று சங்கத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ராக்லாந்து வாழ்க்கை சரித்திரம் இக்காலத்திற்கும் நமக்கும் நமக்கு பின் வரும் சந்திக்கும் பொருத்தமானதாகவும் நம் முன் ஒரு சவாலையும் வைக்கிறது.











# C.R.I. PUMPS

Pumping trust. Worldwide.

## THE MOST ENERGY EFFICIENT PUMPS




# HEBRON ENTERPRISES

**30-E, Dr Nanjappa Road, Coimbatore - 641018.**

**Phone: 98946 77740**


Tamil Printed Book- For Private Cirulation Only

Return Requested:


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401


To


Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401